


Vol.29 | No. 12|December 2025
The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்



22-11-2025



Inauguration of the LSDP Convent at Rameswaram





09-11-2025



Diocesan Day Celebration at Pathukani

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 29 NO :12 DECEMBER 2025



# இறையருள்
# IRAIARUL

## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 04 |
| உயர்பெராயர் திருமுகம் | 08 |
| ஆயர் திருமுகம் | 11 |
| ஆயர் சுற்றுமடல் | 15 |
| ஆண்டு அறிக்கை | 20 |
| மறைக்கல்வி | 30 |
| குழந்தை ஈசோ இயக்கம் | 34 |
| மிஷன் லீக் இயக்கம் | 35 |
| இளையோர் இயக்கம் (SMYM) | 36 |
| இல்வாழ்வு இயக்கம் | 37 |
| உறவிய மலர் | 38 |
| கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் | 39 |
| வின்செண்ட்-தே-பவுல் | 43 |
| மறைமாவட்ட செய்திகள் | 44 |
| மறைவட்ட செய்திகள் | 50 |
| தென்காசி மறைத்தள செய்திகள் | 61 |
| BISHOP'S ENGAGEMENTS - DEC 2025 | 63 |

## Editorial Board

Patron

**His Excellency**

**Mar George Rajendran SDB**

Chief Editor

**Fr. Thomas Kuzhikodil**

Associate Editors

**Mr. S.M. Edwinson**

**Mr. D. Iyathurai**

Published by:

**Fr. Thomas Kuzhikodil**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist, Tamil Nadu, India.**

Designed by:

**Nishaj A**

Printed at

**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

# Pastoral Letter No/GR/53/2025

## ஆயர் திருமுகம்

ஈசோ மெசியாவில் அன்பு நிறைந்த அருட்தந்தையர்களே, துறவறத்தாரே மற்றும் இறைமக்களே, நம் ஆண்டவர் ஈசோ மெசியாவின் அருளும் தந்தையாம் கடவுளின் அன்பும் தூய ஆவியாரின் நட்புறவும் உங்கள் அனைவரோடும் இருப்பதாக!

நம் ஆண்டவர் ஈசோ மெசியாவின் பிறப்பை எதிர்பார்த்து காத்திருக்கும் புனிதமான சிறப்புமிக்க மங்கள வார்த்தை காலத்தின் வாசலில் இன்று நாம் நுழைகிறோம். நமது சீரோ மலபார் திருச்சபையில் 25 நாட்கள் நோன்புடன் நாம் கடைபிடிக்கும் இந்த நாட்கள் சிறப்பான அருள்நிறைந்த நாட்களை நமக்கு தருகிறது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் மே 9, 2024 வெளியிடப்பட்ட, “எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது” என்ற ஆணை மூலம் கிறிஸ்து யூபிலி 2025 ஆம் ஆண்டு அறிவித்தார். “எதிர்நோக்கின் திருப்பயணிகள்” என்ற மையச்சிந்தனையின் அடிப்படையில் “கிறிஸ்துவைக் கொண்டாடுதல், திருச்சயைக் கொண்டாடுதல் மற்றும் நம்பிக்கையைக் கொண்டாடுதல்” ஆகிய மூன்று நோக்கங்களை மையமாகக் கொண்டு யூபிலி கொண்டாட்டங்க்ளை நாம் திட்டமிட்டோம். அதன் தொடர்ச்சியாக திருப்பயணங்களை நாம் மேற் கொண்டும் பரிபூரண பலன்களைப் பெற்றும் திருத்தொண்டு தளங்களை சந்தித்தும் தொடர்ச்சியான ஒப்புரவு அருட்சாதனம் பெற்றும் திருவிவிலியம் வாசித்தும் இரக்கசெயல்கள் செய்தும் இந்த கிறிஸ்து யூபிலி 2025 ஆம் ஆண்டில் இறையருளை பெற்ற நாம் அதன் நிறைவோடு இந்த கிறிஸ்து பிறப்பு விழாவினை நாம் கொண்டாடுகிறோம்.

ஒரு திருவிழாவிற்கான நாட்களை எண்ணி பார்ப்பது போல அல்லாமல் வார்த்தையான கடவுள் மனுவுருவெடுத்து நமக்குள்ளே வாசம் செய்ய வந்த பெத்லகேமின் மாட்டுக் கொட்டிலில் ஏழ்மையாக பிறந்த இயேசுவை நோக்கிய ஒரு திருப்பயணமாக இதை ஏற்றுக் கொள்வோம். நாம் கொண்டாடிய யூபிலி ஆண்டு எதிர்நோக்கின் ஒரு திருப்பயணமாக அமைந்தது. திருச்சபை ஒரு பயணத் திருச்சபை அதன் உறுப்பினர்களாகிய நாம் அனைவரும் அனுதினமும் திருப்பயணிகளாக பயணித்துக் கொண்டிருக்க வேண்டும். எதிர்நோக்கின் திருப்பயணிகள் என்னும் இக்கருத்து இந்த மங்களவார்த்தை காலத்தை நாம் எவ்வாறு பார்க்க வேண்டும் எனும் ஆன்மீகப் பார்வையை நமக்கு

தருகிறது. கிறிஸ்துவின் வருகையே மனித நம்பிக்கையின் இறுதி ஆதாரம். அது இவ்வுலகுக்குரிய துயரங்கள் மற்றும் அச்சங்களிலிருந்து விடுதலை தருகிறது.

எனவே பாவத்திலிருந்தும் அவநம்பிக்கையிலிருந்தும் அலட்சியத்திலிருந்தும் மனம்திரும்பி, நம்முடைய இதயத்தில் ஒரு புதிய ஆன்மீக புதுப்பித்தல் அவசர தேவை என உணர்ந்து நாம் அவருடைய பிறப்புக்காக ஆயத்தம் செய்வோம். உண்மையான திருப்பயணம் என்பது நற்செய்தியின் விழுமியங்களை நோக்கிய பயணம் ஆகும். பாவத்தின் சுமைகளை துறந்து நம்பிக்கையில் நாம் முன்னோக்கி நடக்க அழைக்கப்படுகிறோம். இறைவாக்கினர் எசாயா திருநூல் 9:2 ல் இவ்வாறு காண்கிறோம் “காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியை கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது”. தந்தை கடவுள் நம்மீது காட்டிய இரக்கமுள்ள அன்பை பிரதிபலிக்கும் வகையில் இந்தகாலம் ஆழமான ஒப்புரவுக்கான நேரமாக அமைய வேண்டும். நாம் வழங்கும் மற்றும் பெறும் ஒவ்வொரு மன்னிப்பும் இந்த திருப்பயணத்தின் ஒரு படிநிலையாகும்.

“எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது, ஏனெனில் நாம் பெற்றுள்ள தூய ஆவியாரின் வழியாய் கடவுளின் அன்பு நம் உள்ளங்களில் பொழியப்பட்டுள்ளது” (உரோ5:5) “மகிழ்ச்சியோடு எதிர்நோக்குவது நிறைவேறும் என காத்திருக்கின்றோம். நம் பெருமைமிக்க கடவுளும் மீட்பருமாகிய இயேசு கிறிஸ்துவின் மாட்சி வெளிப்படபோகிறது” (தீத்து 2:13). “நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் கடவுளும் தந்தையுமானவர் போற்றி, அவர் தம் பேரிரக்கத்தின் படி, இறந்த இயேசு கிறிஸ்துவை உயிர்தெழச் செய்து நமக்கு புதுப்பிறப்பு அளித்துள்ளார். இவ்வாறு குன்றா எதிர்நோக்குடன் நாம் வாழ்கிறோம்.(1பேதுரு1:3). இந்த இறைவார்த்தைகள் எதிர்நோக்குடன் பயணிக்கும் திருப்பயணிகள் பெறும் பலன்களை எடுத்துக்காட்டுகிறது.

“நம்பிக்கை என்பது ஊன்றுகோல், நீங்கள் பயப்படும் போது அதை பிடித்துக் கொள்ளுங்கள், நீங்கள் துன்பப்படும் போது அதில் சாய்ந்து கொள்ளுங்கள், நீங்கள் மகிழும் போது அதனுடன் நடனமாடுங்கள்” என புனித அன்னை தெரசா கூறுவார். கிறிஸ்துவின் பிறப்பு நம் ஒவ்வொருவருக்கும் மகிழ்ச்சிக்கான காரணமாக அமைகிறது, ஏனெனில் அவரே நமக்கு நிலைவாழ்வு அளிப்பவர். “அவநம்பிக்கைக்கு உங்களை விட்டுக்கொடுக்காதீர்கள் ஏனெனில் நாம் உயிர்த்தெழுதலின் மக்கள். நம்பிக்கையே நம் கொடி” என புனித இரண்டாம் யோவன் பவுல் கூறுவார். எனவே மாட்டுத் தொழுவத்தில் தொடங்கும் நம் பயணம் சிலுவையால் வெற்றிக்கும் உயர்த்தெழுதலுக்கும் நேரடியாக நம்மை அழைத்துச் செல்கிறது.

நமது சீரோ மலபார் திருச்சபையின் மரபுப்படி டிசம்பர் 1 முதல் 25 வரை நாம் நோன்பை கடைபிடிக்கிறோம். இது ஒரு கடமைக்கு அல்ல மாறாக வரவிருக்கும்

அரசருக்காக நமது உள்ளமாகிய உறைவிடத்தை தூய்மைபடுத்துவதற்கான ஒரு மகிழ்ச்சியான நாட்களாக எடுத்துக் கொள்ள வேண்டும். நோன்பு என்பது உணவைக் கட்டுப்படுத்துவது மட்டுமல்ல, மாறாக நம்மை முழுவதும் ஒழுங்குபடுத்துவது என திருச்சபை தந்தையர்கள் நமக்கு கற்பிக்கிறார்கள்.

1. உடலில் நோன்பு: மரபுசார் உணவு கட்டுப்பாடுகளை நாம் கடைபிடிக்கும் அதே வேளையில் அதிகபடியாக நாம் செலவிடும் நேரங்கள், வளங்கள் மற்றும் பொருள்கள் ஆகியவற்றிலிருந்து நோன்பு இருப்போம். செபம் மற்றும் தியானத்திற்கு அதிக நேரத்தை செலவிட உங்களை பழக்கப்படுத்துங்கள்.

2. நாவுக்கான நோன்பு: இது மிக முக்கியமான நோன்பாக இருக்கலாம். வீண் பேச்சுக்கள், புறங்கூறுதல், காயப்படுத்தும் வார்த்தைகளை பயன்படுத்துதல், குறை கூறுதல் ஆகியவற்றிலிருந்து நாம் விலகியிருப்போம். அதற்கு பதிலாக நமது வார்த்தைகள் அருள்நிறைந்த, உற்சாகமூட்டும் ஆசி நிறைந்த வார்த்தைகளாக அமையட்டும். “உண்மையான நல்ல நோன்பு என்பது உடலை துன்புறுத்துவது மட்டுமல்ல, அது இதயத்தை தூய்மைபடுத்தி நாவை சரி செய்வது” என புனித பேசில் கூறுவார்.

3. மனதின் நோன்பு: டிஜிட்டல் உலகில், தொடர் சமூக ஊடகங்கள் மற்றும் செய்திகளின் இரச்சலில் இருந்து நோன்பு இருங்கள். இவ்வாறு மிச்சப்படுத்தும் நேரத்தை செபம், திருவிவிலியம் வாசித்தல் மற்றும் இயேசுவின் மனுவுருவாதால் பற்றி தியானிக்க செலவிடுவோம். “விழிப்பாயிருங்கள்: ஏனெனில் உங்கள் ஆண்டவர் எந்த நாளில் வருவார் என உங்களுக்கு தெரியாது” (மத் 24:42).

இவ்வருட கிறிஸ்து பிறப்பு விழாவினை கிறிஸ்து யூபிலியின் வெளிச்சத்தில்நாம் கொண்டாடுவோம். யூபிலி அருளின் முழுமையைப் பெற நாம் நல்ல பாவசங்கீர்தனம் செய்வோம். கிறிஸ்து பிறப்பு விழா முன்தயாரிப்பாக அனைத்து ஆலயங்களிலும் ஏறப்பாடு செய்யப்பட்டிருக்கும் பாவசங்கீர்த்தன வழிபாட்டில் பங்குபெறறு இறையருளை நிறைவாக பெறுவோம். இந்த கிறிஸ்து பிறப்பு விழா எல்லா உடைந்த உறவுகளையும் குணப்படுத்தும் விழாவாக அமையட்டும். ஈசோ மெசியாவின் மீது அசைக்கமுடியாத நம்பிக்கை வைப்போம். கிறிஸ்துவின் பிறப்பு நம்முள்ளே பயம் பதட்டம் என்ற இருளை அகற்றட்டும். ஏழைகள், நோயுற்றோர், துன்புறுவோர் மற்றும் ஆதரவற்றோருக்கு கிறிஸ்துவின் அன்பை வழங்குங்கள். நீதி மற்றும் இரக்கத்திற்கு நாம் எப்போதும் சாட்சிகளாவோம்.

கிறிஸ்துவின் பிறப்பு வேளையில் நம் மனதை தொடும் வார்த்தைகளில் ஒன்று, “விடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை” (லூக்2:7) என்பதாகும். கிறிஸ்துவின் பிறப்பில் துயரம் என்னவென்றால், இயேசு ஏழையாக பிறந்தார்

என்பதல்ல மாறாக அவருக்கு இடம் கொடுக்க மனித குலம் தவறிவிட்டது என்பது தான். வரலாற்றில் மிகவும் எளிமையான செயல் திருவிவிலியத்தில் எழுதப்பட்டுள்ளது. “அவர் தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார்” (பிலி 2:7). கிறிஸ்து நமக்காக தம்மையே வெறுமையாக்கினார் என்றால், நாம் மற்றவர்களுக்காக நம்மை வெறுமையாக்க வேண்டும். இன்று நம் வாழ்க்கையில் விடுதி எங்கே இருக்கிறது? அது விழிம்பு நிலையில் வாழும் மக்களிடம் உள்ளது. கைவிடப்பட்ட முதியோர்கள், கல்விக்காக ஏங்கும் வசதியற்ற மாணவர்கள், எதிர்பாராத துன்பங்களை எதிர்கொள்ளும் குடும்பங்கள் மற்றும் அகதிகளிடத்தில் உள்ளது. மங்களவார்த்தை காலத்தில் நம்முடைய ஆயத்தங்கள் பிறரை மையப்படுத்தியதாக அமைய வேண்டும்.

உங்களது நேரத்தில் தனிமையில் தவிக்கும் அண்டை வீட்டாரையோ அல்லது உறவினரையோ சந்தியுங்கள். உங்களுக்கு தீங்கிழைத்த ஒருவரை மன்னிக்க அல்லது மன்னிப்பு கேட்க வேண்டுமென்ற எண்ணத்துடன் முயற்சி செய்யுங்கள். நம் உணவிலிருந்து சேமித்த பணத்தை தேவைபடுகின்றவர்களுக்கு மனதார கொடுங்கள். “மற்றவர்கள் மூலமாக கடவுள் உங்களை அன்பு செய்ய அனுமதிக்கும் ஒவ்வொரு முறையும் கிறிஸ்மஸ் விழாவே” என புனித அன்னை தெரசா கூறுவார். நம் இதயமெனும் விடுதியிலும் இயேசுவுக்கான இடத்தை தயார் செய்வோம். மனதில் அடைத்து வைத்திருக்கும் குப்பைகளை பாவசங்கீர்தனம் வழியாக தூய்மைப்படுத்துவோம். காலியாக்கப்பட்ட இதயத்தோடு இயேசுவின் பிறப்புக்காக நாம் காத்திருப்போம்.

வார்த்தை மனுவுருவான இயேசுவை நமது வாழ்வின் வல்லமையாகக் கொண்டு வலிமையோடு பயணிப்போம் டிசம்பர் மாதம் 5 முதல் 7 வரை கல்லுவிளை சீனாய் தியான இல்லத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மறைமாவட்ட நற்செய்த பெருவிழாவிலே நாம் அனைவரும் ஒரே குடும்பமாக பங்கேற்று பயன்பெறுவோம். இறைமகன் இயேசுவின் ஆற்றல் மிக்க வார்த்தைகள் நம்மை தூய்மைபடுத்தும், நல்வாழ்வைத் தரும், நிலை ஒளியை நோக்கி நம்மை நடத்திச் செல்லும் நற்செய்தி பெருவிழாவாக அது அமையட்டும். எனவே குடும்பமாக அனைவரும் இந்நற்செய்தி பெருவிழாவில் கலந்து கொள்ள உங்களை அன்புடன் அழைக்கிறேன்.






ஆயர் இல்லம்
27.11.2025

† மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB
தக்கலை மறைமாவட்ட ஆயர்

**Mar Raphael Thattil**
Major Archbishop of the Syro-Malabar Church

**Prot.No.0787/2025**

# சுற்றுமடல்

## மரியா பக்திக்கான சில வழிமுறைகள்

சீரோ மலபார்த் திருச்சபையின் உயர் பேராயர், மார் ராஃபேல் தட்டில் அவர்கள் பேராயர்களுக்கும் ஆயர்களுக்கும் குருக்களுக்கும் இருபால் துறவியருக்கும் அனைத்து இறைமக்களுக்கும் எழுதுவது.

**இறை இயேசுவில் அன்புக்குரிய சகோதரர் சகோதரிகளே!**

இறைநம்பிக்கைக்கான கோட்பாட்டுக்கான திருப்பேராயம் திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களின் அனுமதியுடன் "நம்பிக்கை நிறை இறைமக்களின் தாய்" (Mater Populi Fidelis – Mother of the Faithful People) என்னும் கோட்பாட்டு குறிப்பை நவம்பர் 4, 2025 அன்று வெளியிட்டது. இதன்படி, புனித கன்னி மரியாவை, "இணை-மீட்பர்," "இணை-இணைப்பாளர்," "அருள்வரங்களின் தாய்" என்னும் பெயர்களை பயன்படுத்தி அழைப்பது இறையியல்படி உகந்தது அல்ல என்றும் அவைகள் விவேகத்துடன் கையாளப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறது. இக்கோட்பாட்டு குறிப்பைப் பற்றிய விவாதங்கள் சமூக ஊடகங்களில் நடக்கின்றன. நம்பிக்கையாளர் நடுவில் நிலவும் கருத்துவேறுபாடுகளை செய்திகளாக சில பத்திரிகைகளும் வெளியிட்டன. இக்குறிப்பு, கத்தோலிக்கர்கள் அல்லாத கிறிஸ்தவர்களின் கருத்துகளை ஏற்ப தாகவும், மரியாவுக்கு அளிக்கப்பட்ட மாண்பை குறைப்பதாகவும் தவறான தகவல்கள் பரப்பப்படுகின்றன.

தாய் மரியாவைப் பற்றிய, திருச்சபையின் அடிப்படை படிப்பினைகள் எதுவும் மாற்றத்திற்கு உட்படுத்தப்படவில்லை என்னும் தெளிவை நாம் முதலில் பெறுவோம். மரியாவைப் பற்றிய நான்கு அடிப்படை கொள்கைகள் உள்ளன: மரியா கடவுளின் தாய், என்றும் கன்னி, அமல உற்பவி, மரியாவின் விண்ணேற்பு. இவைகள் மாற்றமின்றி திருச்சபையில் அப்படியே தொடர்கின்றன. அதே வேளையில், புனித கன்னி மரியாவை குறிப்பிடுவதற்காக பயன்படுத்தப்படும் வேறு சொல்லாடல்களில் தவறான இறையியல் பார்வைகள் கலந்துள்ளன. இவற்றை திருத்தும் நோக்குடன் இக்கோட்பாட்டு குறிப்பு எழுதப்பட்டுள்ளது. மனித உடல் பூண்ட இறைவார்த்தையை மரியா பெற்றெடுத்தார். அதன் வழியாக, அவர் நம்முடைய தாயாகவும் மாறினார். மரியாவை தாயாக ஏற்று அருள்வாழ்வில் நிலைத்திருக்கவும் இக்குறிப்பு நமக்கு அழைப்பு விடுக்கிறது என்பதை மறவாமல் இருப்போம்.

வழக்கத்தில் உள்ள மரியாவை குறிப்படும் சில சொல்லாடல்கள்

குழப்பங்களை உருவாக்கும் என்பதை இக்குறிப்பு பதிவு செய்கிறது. இதில், முதலாவதாக "இணைமீட்பர்" என்று மரியாவை அழைப்பதைத் தவிர்க்க வேண்டும். மரியா இணைமீட்பர், அதாவது கிறிஸ்துவோடு இணைமீட்பராக இருக்கிறார், என்பதை திருச்சபை எக்காலத்திலும் அதிகாரபூர்வமாக அறிவித்ததில்லை. தாய் மரியின் பற்றாளர்கள், மரியாவிடம் தாங்கள் கொண்டிருக்கும் அன்பை வெளிப்படுத்தும் நோக்குடன் இப்படி அழைத்தார்கள் என்பது மறுப்பதற்கில்லை. இப்படி மரியாவை அழைப்பதில் இறையியல் சிக்கல்கள் உள்ளன. அது சில தவறான படிப்பினைகளுக்கு வழிகோலும். மரியாவை இணைமீட்பர் என அழைக்கும் போது, இயேசுவின் மீட்புப்பணி, தாய் மரியாவின் ஒத்துழைப்பின்றி, முழுமையாகாது என்னும் தவறான கருத்து உருவாக வழியுண்டு. அவ்வாறே, ஒருவர் மீட்புப் பெறுவதற்கு, இயேசு மற்றும் மரியாவின் இணையான முயற்சி அவசியம் என்னும் தவறான கருத்தும் உருவாகக் கூடும். இத்தகைய திரிபு புரிதல்கள், ஒரே மீட்பரான இயேசுவின் மீட்புப் பணியின் தனித்தன்மையை பொலிவிழக்கச் செய்யும். ஆகையால் மரியாவை இணைமீட்பர் என அழைப்பதை தவிர்க்க வேண்டும் என்று இக்கோட்பாட்டு குறிப்பு அறிவுறுத்துகிறது. அதே வேளையில், மீட்புப்பணியில் புனித கன்னி மரியா ஆற்றிய பங்கை இக்குறிப்பு எவ்வகையிலும் மறுத்துரைக்கவில்லை. இறைத்திருவுளத்திற்கு தன்னை தகையளித்த மரியா, இயேசுவின் தாயாக மாறுவதற்காக தன்னையே தயாரித்தார். மரியா, மீட்புப் பணியில் ஒத்துழைத்தார் என்னும் கருத்தை வலியுறுத்தும் இக்கோட்பாட்டு குறிப்பு, இணைமீட்பர் என்னும் சொல்லாடலின் பயன்பாட்டால் உருவாக வாய்ப்புள்ள இறையியல் தவறுகளையும் சுட்டி காட்டுகிறது. முழுச்சுதந்திரத்துடன், நம்பிக்கை மற்றும் கீழ்ப்படிதல் வழியாக மீட்புப்பணியில் ஒத்துழைத்தார் என்னும் உண்மைக்குள் மரியாவின் மேன்மை தங்கியிருக்கிறது என்பது சரியான இறையியல் பார்வையாக இருக்கும்.

"அருள்வரங்களின் தாய்" என்னும் சொல்லாடல் வழியாகவும் இறையியல் தவறுகள் தோன்றலாம். அருள்வரங்கள் அனைத்தும் மரியாவிடமிருந்து பிறக்கின்றன என்னும் தவறான எண்ணம் உருவாகக் கூடும். கடவுள் ஒருவரே அருள்வரங்களின் ஊற்று. திருச்சபையில் அருளடையாளங்கள் வழியாக இறைமகனார் அருள்வரங்களைப் பொழிகிறார். இம்மறைபொருளின் உண்மையானது பிழையின்றி பாதுகாக்கப்பட வேண்டும். எனவே, கன்னி மரியாவை அருள்வரங்களின் தாய் என அழைக்க வேண்டாம் என இக்குறிப்பு அறிவுறுதத்துகிறது.

இணை-இணைப்பாளர் (mediatrix) என்னும் சொல்லாடலும், விவாதிக்கப்பட வேண்டும். தாய் மரியா நம் அனைவருக்காகவும் பரிந்து பேசுகிறார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. "மரியா நமக்காகப் பரிந்து பேசுகிறார்" என்னும் கருத்துக்கும், மரியா "இணை-இணைப்பாளர்" என்னும் சொல்லாடலுக்கும் இடையே வேறுபாடு உண்டு. இவற்றில் நிலவும் இறையியல் வேறுபாட்டை, இக்குறிப்பு முன்வைக்கிறது. கடவுளுக்கும் மனிதருக்கும் இடையே ஒரே ஒரு

இணைப்பாளர் மட்டுமே உண்டு, அவரே கிறிஸ்து. கிறிஸ்துவுக்கு இணையாக, இணைப்பாளராக மரியாவை முன்வைப்பதை திருச்சபை தவிர்க்க அழைக்கிறது. கிறிஸ்து ஒருவரே மனிதருக்கும் கடவுளுக்கும் இடையேயான இணைப்பாளர் என்பதை, இக்குறிப்பு வலியுறுத்துகிறது. காரணம் என்னவென்றால், அவரே ஒரே வேளையில் கடவுளாகவும் மனிதராகவும் உள்ளார். கிறிஸ்து ஒருவரே இணைப்பாளர் என்னும் கோட்பாடு வழியாக, வேறு எவரும் கடவுளுக்கும் மனிதருக்கும் இடையே இணைப்பாளராக இருக்க முடியாது என்னும் அர்த்தம் முன்வைக்கப்படுகிறது. இத்தகைய தெளிவின்றி, மரியா இணை-இணைப்பாளர் என்று சொல்லும் போது அது தவறான எண்ணங்களுக்கு வழிவகுக்கும். மனிதருக்கும் கடவுளுக்கும் இடையே ஒரே இணைப்பாளராக இருக்கும் கிறிஸ்துவின் இணையில்லா தனித்தன்மையை வலியுறுத்தும் நோக்கத்தை இக்குறிப்பு கொண்டிருக்கிறது. அத்தோடு, மரபுவழி மரியாவோடு கொண்டிருக்கும் பக்தியை சரியானப் பாதையில் நகர்த்தி நெறிப்படுத்தவும் செய்கிறது.

திருச்சபையில் உன்னதமான மரியாதைக்கு (hyperdulia) உரியவர் மரியா. கிறிஸ்துவைப் பின்பற்றிய மரியா, அவரின் சிலுவையின் கீழ் நிற்கும் அளவுக்கு நம்பிக்கையையும் துணிவையும் பெற்றிருந்தார். இயேசு உயிர்துறக்கும் முன், தம் தாயை நம்பிக்கையாளர்கள் அனைவரின் தாயாக அளித்தார் (யோவா 19, 27). தாயாகவும் திருச்சபையின் வடிவமாகவும் விளங்கும் மரியா, நம்பிக்கையாளர்களுக்கு ஊக்கம் அளிப்பவராகவும், மாதிரியாகவும் திகழ்கிறார். உடலோடு மரியா விண்ணகத்திற்கு எடுக்கப்பட்டார். அவரை மாதிரியாக கொண்டிருக்கும் திருச்சபையும் விண்ணகத்தில் நுழையும் என்பது நம்பிக்கை. செபமாலை. நவநாள், உத்திரிய பக்தி, மரியா வழியாக ஏறெடுக்கப்படும் பிற செபங்கள் அனைத்தும் எவ்வித மாற்றமுமின்றி திருச்சபையில் தொடர்கின்றன. இறைநம்பிக்கைக்கான கோட்பாட்டுக்கான திருப்பேராயம் வெளியிட்டிருக்கும் இக்கோட்பாட்டு குறிப்பில் அடங்கியிருக்கும் கருத்துக்களை, சுயநல ஆதாயங்களுக்காக திரித்துக் கூறுவோர் பொது வெளியில் உள்ளனர். இவர்களின் வலைக்குள் சிக்காமல் கவனமாக இருப்போம். இக்குறிப்பு, மீட்புத்திட்டத்தில் இயேசு மற்றும் மரியா வகிக்கும் பங்குகளைப் பற்றியத் தெளிவை தந்து, நம்பிக்கையாளர்கள் சரியான பாதையில் பயணிக்க கருத்துகளை முன்வைக்கிறது. தெளிவு பெறுவோம், நம்பிக்கையில் உறுதியாவோம். தாய் மரியாவின் பரிந்துரை வழியாக, கடவுள் உங்களுக்கு நிறைவான ஆசி அளிப்பாராக! காக்கனாடு செயின்ட் தோமஸ் மவுண்டிலிருந்து உயர் பேராய ஆட்சி மையத்திலிருந்து நவம்பர் 8, 2025 அன்று வழங்கப்பட்டது.



மார் ராஃபேல் தட்டில்
சீரோ மலபார் சபையின் உயர்பேராயர்



Syro-Malabar
Major Archiepiscopal Curia | Mount St. Thomas, P.B. No. 3110, Kakkanad P.O., Kochi - 682030, Kerala, India | Tel: 0484-2428271 | Email: majorarchbishop@gmail.com
Website: www.syromalabarchurch.in

Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சுற்றுமடல்
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

# Circular letter No/GR/64/2025

## ஆயர் சுற்றுமடல்

### மரியா பக்திக்கான சில வழிமுறைகள்

ஈசோ மெசியாவில் அன்புக்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும் ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!

நமது மறைமாவட்டம் உருவாகி நவம்பர் 11-ம் தேதி 29 ஆண்டுகளை நிறைவு செய்கிறது. இவ்வேளையில் நமது மறைமாவட்ட தினத்தை இன்று, நவம்பர் மாதம் 9-ம் தேதி பங்களவில் கொண்டாடுகின்றோம். இவ்வேளையில் கடவுள் நம் ஒவ்வொருவருக்கும் சிறப்பாக மறைமாவட்டத்திற்கு வழங்கிய அருட்கொடைகளுக்காக நன்றி செலுத்துவோம்.

கடந்த வருட மறைமாவட்ட தினத்தை நவம்பர் 11-ம் தேதி பள்ளிக்கோணம் திரு இருதய ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்து நான் உங்கள் அனைவருக்காகவும் செபித்தேன். இச்சுற்று மடல் வழியாக கடந்த ஒரு வருடம் இறைவன் நமக்கு வழங்கிய நன்மைகளை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

முன்னாள் உயர் பேராயர் மார் ஜார்ஜ் கர்தினால் ஆலஞ்சேரி அவர்கள் நவம்பர் 15 முதல் 22 - வரையிலான நாள்களில் நமது மறைமாவட்டத்தைப் பார்வை இட்டார். அருட்தந்தையர், அருட்சகோதரிகள், பொது நிலையினர் என ஒவ்வொருவரையும் சந்தித்து உரையாடியது பெருமைவாய்ந்த நிகழ்வாகவே அமைந்தது.

இவ்வருடம் நமது மறைமாவட்டமானது "கிறிஸ்து யூபிலி ஆண்டு 2025 - யை சிறப்பாக கொண்டாடி வருகிறது. கிறிஸ்து யூபிலியை மையமாகக்கொண்டு நாகர்கோவில் புனித அல்போன்சா திருத்தல ஆலயம், புனித ஜார்ஜியார் திருத்தலம் முன்சிறை மற்றும் புனித சிலுவை ஆலயம் மாலைக்கோடு ஆகியவை யூபிலி ஆண்டு திருத்தலங்களாக அறிவிக்கப்பட்டது. நாம் அனைவரும் நோன்பிருந்து ஒப்புரவு திருவருட்சாதனம் பெற்று செபத்துடன் இத்திருத்தலங்களுக்கு சென்று பாவ பரிகார ஜெபம் ஏறெடுத்ததோடு பரிபூரணப் பலன் "தண்ட விமோஜனம்" பெற்றுக்கொண்டோம். நமது மறைமாவட்ட பக்த சங்கங்கள் அனைத்தும் கிறிஸ்து ஜூபிலி ஆண்டு 2025 என்பதை மையக்கருத்தாக கொண்டு ஏராளமான நிகழ்வுகளை ஏற்பாடு செய்தது. இவ்வேளையில் கிறிஸ்து ஜூபிலி ஆண்டு சிறப்புற ஒத்துழைத்த அனைவரையம் நன்றியோடு நினைக்கின்றேன்.

## இறை அழைத்தல்

இவ்வருடம் புதிய குருக்களாக அருட்தந்தை அமன்றோ சன்னி எடக்கூட்டத்தில், அருட்தந்தை சுனில் ஆன்றனி, அருட்தந்தை அகஸ்டின் (அனூப்) தத்தப்பள்ளி ஆகியோர் திருநிலைப்படுத்தப்பட்டனர். பக்ஸர் மறைமாவட்டத்திற்காக அருட்பொழிவு செய்யப்பட்ட அருட்தந்தை ஜோகேஷ் (ஜாண்) பொளச்சிற அவர்கள் நமது மறைமாவட்டத்தில் ஜூலை 3, 2025 அன்று இணைந்தார். மறைமாவட்ட குருக்களின் எண்ணிக்கை 62 ஆக உயர்ந்துள்ளது. இவ்வருடம் நமது மறைமாவட்டத்தில் பணிபுரிய சங்ஙனாச்சேரி, இடுக்கி, பாலா, காஞ்சிரப்பள்ளி, மானந்தவாடி மறைமாவட்டங்கள் மற்றும் CMI, MST, SDB போன்ற துறவற சபைகளிலிருந்து வந்திருக்கும் அருட்தந்தையர்களுக்கு பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

நமது மறைமாவட்ட துறவற சபைகளான CMC துறவற சபைக்காக அருட்சகோதரி இவானா கிறிஸ்இ ளுஉ துறவ சபைக்காக ஜெனிபா மற்றும் LSD துறவற சபைக்கு அருட்சகோதரி மேரி டெசா வும் தங்களது துறவற திருவுடை பெற்று முதல் வார்த்தைப்பாட்டை ஏற்றுக்கொண்டார்.

## ஆலய அர்ச்சிப்பு

பரைக்கோடு கிறிஸ்து அரசர் தேவாலயம் மற்றும் குருசடி, மார்த்தாண்டம் புனித வின்சென்ட் தே பவுல் ஆலயம், குலசேகரம் மறைபரப்பு தளத்தில் புதிதாக கட்டப்பட்ட புனித ஜாண் பால் II ஆலயம், தெற்றிவிளை புனித மிக்கேல் அதிதூதர் ஆலயம் ஆகியவை இவ்வருடம் அர்ச்சிக்கப்பட்டு இறைவழிவாட்டிற்காக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

## பக்த இயக்கங்கள்

நமது மறைமாவட்டத்தில் குழந்தை ஈசோ இயக்கம், மிஷன் லீக், மறைக்கல்வி, இளையோர் இயக்கம், மரியாயின்சேனை, குடும்ப நலவாழ்வு இயக்கம், மாதர் ஜோதீஸ், தந்தையர் இயக்கம், பொதுநிலையினர் பேரவை, உறவியம், வின்சென்ட் தே பவுல் இயக்கம், சீனாய் இறையியல், சிறைச்சாலை மேய்ப்புப்பணி, கிறிஸ்தவ ஐக்கிய பேரவை, புலம் பெயர்ந்தோர் பணிக்குழு, கல்வி பணிக்குழு, அருட்பணிபேரவை, பாடகற்குழு, சீனாய் தியான இல்லம், இறையழைத்தல் மற்றும் திருப்பணியாளர்கள் இயக்கம் மற்றும் வழிபாட்டுக்குழு ஆகியவை சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

மறைமாவட்ட மறைக்கல்வி நிலையமானது பங்களவில் 25 மற்றும் 50 வருடங்களாக மறைக்கல்வி ஆசிரியர்களாக பணி செய்தவர்களை கௌரவித்து பாராட்டு விழா ஏற்பாடு செய்தது.

புனித வின்சென்ட் தே பவுல் சபையின் தக்கலை மத்திய பேரவையின் கீழ் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனை அருகே அமைந்துள்ள "விடியல் அருள் அவை நடுவம் (VAAN) என்ற கட்டிடத்தை ஏழை எளிய மக்களின் நலனுக்கான தக்கலை மறைமாவட்ட முதல் ஆயரும், சீரோமலபார் சபையின் முன்னாள்

உயர்பேராயருமான மார் ஜார்ஜ் கார்டினல் ஆலஞ்சேரி அவர்கள் திறந்து வைத்தார் என்பது பெரிமைக்குரிய ஒன்றாகும். இந்த வருடம் பொதுநிலையினர் பணிக்குழு, நமது மறைமாவட்டத்தை சேர்ந்த மக்களுக்கு நலவாரிய அட்டை வழங்கி தனது பணியை தொடங்கியது.

நமது மறைமாவட்டத்தில் செயல்படும் மரியாயின் சேனை தக்கலை கொமிசியத்தின் கீழ் ஆறு கூரியக்களுக்கும் அவற்றிற்கு ஆன்ம இயக்குநர்களையும் நியமித்து சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

நமது மறைமாவட்ட மாதர் ஜோதிஸ் அன்னையர் சீரோமலபார் குளோபல் மாதார் ஜோதீஸ் பொறுப்பாளர்கள் ஒருங்கிணைக்கும் முடிவைறை ஜெபமாலையில் பங்குபெறுகிறனர் என்பது மறைமாவட்டத்திற்கு பெருமை சேர்க்கின்றது.

## பிறரன்பு பணி

கடந்த வருடம் மழையினால் பதிக்கப்பட்ட வயநாடு மக்களின் நலனுக்காக நமது மறைமாவட்ட பங்குகள் மற்றும் நிறுவனங்கள் சார்பாக ரூ 15,16,175/- வழங்கப்பட்டது. இது நமது மறைமாவட்ட மக்களின் பிறரன்பு பணியை ஈகை மனப்பான்மையையும் எடுத்துக்கூறும் வகையில் அமைந்திருந்தது.

## மறைத்தொண்டு பணிகள்

தென்காசி மாவட்டம் சுந்தரபாண்டியபுரத்தில் அமைந்துள்ள நித்திய சகாய மாதா மறைத்தொண்டு தளத்தில் ஒரு இடம் கட்டிடத்துடன் வாங்கப்பட்டு திருப்பலி நிறைவேற்றப்பட்டு வருகிறது. தென்காசி, மேக்கரையில் அமைந்துள்ள புனித ஜார்ஜியார் மறைத்தொண்டு தளத்தின் 25 ஆம் ஆண்டு யூபிலி நிறைவானது ஏப்ரல் மாதம் கொண்டாடப்பட்டது.

நமது மறைமாவட்டத்தின் விரிவாக்கப்பட்ட மறைத்தொண்டு பணித்தளமான தூத்துக்குடி மாவட்டம், கயத்தார் ராஜாபுதுக்குடி பகுதியில் புதிய ஆலயம் கட்டப்பட்டு அர்ச்சிக்கப்பட்டது. இதன் அருகில் TN-குளம் என்னும் ஊரில் புதிதாக மறைப்பரப்பு பணிதளம் அமைக்கப்பட்டு, ஓலை குடிசையில் செபங்கள் நடைபெற்று வருகிறது.

தேனி - கம்பம் அருகே அமைந்துள்ள மறைத்தொண்டு தளமானது அங்கூர்பாளையம் கிராமத்தில் மக்களை ஒருங்கிணைத்து கிராம விழா கொண்டாடப்பட்டது.

தக்கலை மறைமாவட்டத்திலிருந்து புலம்பெயர்ந்தவர்களின் ஆன்மீக தேவைகளை கருத்தில் கொண்டு கர்நாடகா பெங்களூரில் வைத்து அவர்களது சங்கமம் நடைபெற்றது.

மதுரை, விருதுநகர், இராமேஸ்வரம் மற்றும் தென்காசி ஆகிய பகுதிகளில் நமது மறைமாவட்ட திருத்தொண்டு பணிகள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. நமது மறைமாவட்ட மக்கள் இம்மறைப்பணி தளங்களை பார்வையிட்டு அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்கின்றீர்கள் என்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

கேரளாவில் உள்ள தொடுபுழாவில் மூலமற்றம் என்னும் இடத்தில் நமது

மறைமாவட்ட பணிகளுக்காக தனது இடத்தை அளித்து "சினேக வில்லா" என்னும் முதியோர் காப்பகம் நடத்த உதவி செய்துவரும் திருமதி மெர்சி ஜோஸ் காப்பன் அவர்களை மறைமாவட்டம் நன்றியோடு நிறைவு கூருகிறது. அவரது பெருந்தன்மைக்கு மற்றொரு சான்றாக, நோய்தடுப்பு சிகிச்சைப் பிரிவுக்கான புதிய கட்டிடம் நமது மறைமாவட்டத்திற்கு வழங்கியுள்ளார் என்பதை இந்நேரத்தில் மிக்க நன்றியோடு நினைவு கூறுகின்றேன்.

## இறந்தோர் நினைவு

கன்னியாகுமரி மிஷன் மற்றும் தக்கலை மறைமாவட்டத்தில் மறைதொண்டு பணியாற்றி இறைவனடி சேர்ந்த அருட்தந்தை ஜோஸ் கூலிப்புரக்கல் CMI, அருட்தந்தை ஜார்ஜ் தேவலக்கர CMI, அருட்தந்தை செபாஸ்டின் பினேல் CMI, அருட்தந்தை ஜோசப் மடத்தில், அருட்சகோதரி மரிய கொரட்டி அழகன்பறம்பில் SDS, அருட்சகோதரி ஆலிஸ் விஜி CMC, அருட்சகோதரி எல்ஸி மேத்யூ SDS, அருட்சகோதரி பிரிஜிட் பால் தெக்கேபறம்பில் SDS, அருட்சகோதரி ஹெலேனா கோம்பனதோட்டத்தில் SDS, அருட்சதோகரி மெர்லின் ஜோஸ் CMC, அருட்சகோதரி மேரி ஜோசப் OMMI, அருட்சகோதரி ஜோசியா SDS, அருட்சகோதரி சோபியா சாக்கோ SDS, அருட்சகோதரி மேரி தோமஸ் SDS, அருட்சகோதரி டீரீசா ஜோசப் SDS ஆகியோரின் ஆன்ம இளைப்பாறுதலுக்காக இவ்வேளையில் செபிப்போம்.

29 ஆம் மறைமாவட்ட தின கொண்டாட்டத்தில் பங்கேற்கும் உங்கள் அனைவருக்கும் இவ்வேளையில் நன்றியை தெரிவித்துக் கொள்ளுகின்றேன். நான் 14-ம் லியோ திருத்தந்தை அவர்களை நேரில் சந்தித்து நமது மறைமாவட்டத்தை அவருக்கு அறிமுகம் செய்து நமது பணிகளுக்காக செபிக்கவும் வேண்டிக்கொண்டேன். நமது மறைமாவட்டம் மறைத்தொண்டு பணிகளில் மேலும் சிறப்புற இவ்வேளையில் உங்கள் செப உதவியையும் கேட்டுக்கொள்கிறேன். நாம் மறைமாவட்டம் என்னும் நிலையில் ஒரே குடும்பம் என்ற உணர்வில் வாழவும் இறைப்பணியில் ஈடுபடவும் உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இறைவன் உங்கள் அனைவரையும் உங்கள் முயற்சிகளையும் உங்கள் தேவைகளையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

ஆயர் இல்லம்
03.11.2025

† மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB
தக்கலை மறைமாவட்ட ஆயர்

# Bishop's Circular

For Priests / Sisters

Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
Bishop's House, P B No: 12, Thuckalay PO,
Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

Ref. No. Priests/GR/176/2025

30 November 2025

Dear Readers,

Greetings of peace and joy in the Lord!

As we stand at the threshold of this sacred season of Annunciation and the conclusion of the Christ Jubilee Year 2025, I write to you with a heart filled with gratitude for your faithful ministry and dedication to God's people. December invites us into a profound journey of preparation, celebration, and renewal - a time when our ancient Syro-Malabar tradition shines with particular brilliance through its spiritual disciplines and liturgical richness.

**The Sacred Season of the 25-Day Fast**

Our Syro-Malabar tradition holds a special treasure that distinguishes us within the Catholic community: observing the 25 days fast during the Season of Annunciation (Subara). This season, which usually starts on a Sunday between November 27 and December 3, lasts through Christmas, with the fast observed from December 1 to December 24. This ascetic practice, rooted in our East Syriac heritage, is more than discipline—it is a spiritual teaching that prepares the faithful to welcome Christ with pure hearts.

As shepherds of God's people, you are called to be the first witnesses of this sacred fast. The Season of Annunciation, with its four Sundays before the Nativity, invites us to reflect on the annunciations unfolding in salvation history and reaching their fullness in the Annunciation to the Virgin at Nazareth. The fasting period is fundamentally about creating interior space for the Lord. In a world saturated with noise, distraction, and material excess, our tradition offers the faithful a counter-cultural path: self-denial that leads to self-discovery, abstinence that results in an abundance

of grace, and physical hunger that awakens spiritual hunger for God alone.

I encourage you to teach your faithful that this fast is not about legalistic observance but about transformation. Abstaining from meat and dairy products (for those who are able) is meant to discipline the body so that the spirit may soar. The traditional practice of having one full meal daily, along with reducing entertainment and worldly pleasures, creates space for prayer, Scripture reading, and acts of charity. This is the wisdom of our ancestors—that external discipline supports internal conversion.

In your preaching during these weeks of Annunciation, help your people understand that fasting:

- Cultivates detachment from material goods and awakens solidarity with the poor
- Sharpens our spiritual senses to recognise the movements of grace
- Trains us in self-mastery and freedom from the tyranny of desires
- Prepares us to receive worthily the great Gift that is Christ himself
- Unites us with the penitential practices of the early Church and our East Syriac ancestors
- Mirrors the forty days of fasting that characterise our Great Lent, adapted for this preparatory season.

Encourage families to fast together, attend the Holy Qurbana daily, and engage in tangible acts of charity during this season. The Season of Subara (Annunciation) and Qudash Yeldo (Nativity) calls us to welcome Christ not only liturgically but also in our daily lives—into our hearts, homes, and communities. As we enter this holy season, let us deepen our preparation for the coming of Emmanuel, God-with-us.

As priests, let us be exemplary in our own observance. Our people need to see in us men who take these traditions seriously, who fast not out of obligation but out of love, who embrace the discipline as a privileged path to intimacy with the Lord.

**Christmas: The Heart of Priestly Joy**

Among all the faithful, we priests have a special connection with Christmas. The birth of Christ is not just a historical event we remember; it is the core mystery of our priesthood. At every

Holy Qurbana, we participate in the kenosis of Christ—his self-emptying love that started in the manger of Bethlehem and reached its peak on the Cross of Calvary.

Christmas should ignite within us a profound sense of wonder and gratitude for our priestly vocation. Reflect on the mystery: the Eternal Word, through whom all things were created, became flesh and dwelt among us. He who holds the universe in his hands allowed himself to be embraced by a young mother. He whom angels serve became the servant of all. This exemplifies the pattern of priesthood—radical humility, complete self-gift, a descent into the human condition to elevate humanity to God.

As we celebrate the Nativity, let us reflect on several dimensions of our priestly life:

**Our Poverty of Spirit:**

Just as Christ was born into poverty, stripped of worldly prestige and power, so too are we called to embrace evangelical simplicity. The manger questions our tendency toward comfort, status-seeking, and accumulation. This Christmas, let us examine our relationship with material possessions. Are we living as men who have forsaken all to follow Christ, or have we gradually adapted to middle-class comforts? The poverty of Bethlehem is not destitution but freedom—the freedom to serve without being encumbered by possessions.

**Our Availability:**

Mary and Joseph made themselves available to God's plan despite the inconvenience, uncertainty, and social stigma. As priests, we are called to similar availability—to be present for our people at all hours, to interrupt our plans for pastoral emergencies, and to set aside our preferences for the needs of the flock. Christmas reminds us that God's timing often disrupts our schedules, and grace seldom arrives at convenient moments.

**Our Joy:**

The angels announced "good news of great joy" to the shepherds. Fathers, our priesthood should radiate this joy. If we have lost the wonder of our vocation, if ministry has become

routine or burdensome, Christmas is our opportunity for renewal. Return to your first love. Remember the day of your ordination, the gift you received, the dreams you harboured. Christ's birth is God's definitive "yes" to humanity - and your priesthood is your "yes" to God. Let this mutual gift-giving fill you with gladness.

**Our Mission to the Marginalised:**

Christ was born among the lowly, announced first to shepherds, laid in an animal's feeding trough, born to a carpenter's family in a humble village. This exemplifies the Gospel's preferential option for the poor right from the start. Our priestly ministry must reflect this priority. Are we accessible to the poor, the sick, the marginalised? Or do we gravitate toward the influential and comfortable? Let the manger reorient our pastoral priorities.

As we observe the liturgies of Christmas, let us do so with hearts filled with faith and love. Prepare the liturgies carefully, preach with conviction, and celebrate the Holy Qurbana with devotion. Your people deserve to encounter Christ through beautifully celebrated liturgies that reveal the glory and tenderness of this mystery. Let your homilies be brief but profound, touching hearts rather than simply informing minds. Remember that our Syro-Malabar tradition has long treasured this feast. Although historically the Feast of Denha (Epiphany) on January 6th was more celebrated, Christmas has become the central point through which we proclaim the Incarnation to the modern world.

**The Conclusion of the Christ Jubilee Year 2025**

December 2025 marks the end of the Great Jubilee Year proclaimed by Pope Francis under the theme "Pilgrims of Hope." This extraordinary year of grace has called the universal Church to pass through the Holy Doors, undergo profound conversion, receive the gift of indulgence, and become missionaries of hope in a world shaped by conflict, inequality, and despair. The solemn conclusion of the Jubilee Year at the diocesan level will take place on 7 December 2025, during the Bible convention. At the parish level, we will conclude the Jubilee on 28 December 2025.

As this Jubilee draws to a close, we must ask ourselves: What fruits has this Jubilee year borne in our Eparchy? Have our faithful truly

experienced the mercy of God? Have we, as priests, become more compassionate shepherds, more passionate evangelisers, more credible witnesses to hope?

The Jubilee reminds us that the Church exists not for herself but for the world. We are called to be a field hospital for wounded humanity, a community of the reconciled who reconcile others, a people of hope who awaken hope in hearts darkened by fear and cynicism. This requires that we ourselves be men of deep prayer, rooted in the Eucharist, formed by Scripture, and animated by missionary zeal.

As the Jubilee concludes with the sealing of the Holy Doors, let us not lock away the graces received but rather carry them forward into 2026 and beyond. The Jubilee should signify not an end but a new beginning - a Church renewed in mission, priests recommitted to holiness, and faithful awakened to their baptismal dignity and responsibilities.

Dear Fathers, we are blessed to serve as priests in the Syro-Malabar Church, inheriting a rich spiritual and liturgical tradition that traces back to the Apostle Thomas. Our Season of Annunciation, along with its 25 days fast, is not a burden but a gift—an established pathway to holiness. Our Christmas is not just a cultural holiday but the celebration of the Incarnation that transformed everything. Our Jubilee Year is not an ecclesiastical novelty but a return to the biblical vision of liberation, mercy, and new beginnings.

As we journey through these weeks of the Season of Annunciation, may we walk with Mary and Joseph towards Bethlehem, fasting from everything that hinders our pilgrimage, longing for the Lord's coming with pure hearts. As we celebrate Christmas, may we rediscover the joy and humility of our priesthood at the manger of the Infant King. As we complete the Jubilee, may we be renewed as pilgrims of hope, carrying the light of Christ into the darkness of our times.I assure you of my prayers and ask for yours. May this December be a season of deep grace for you personally and for all the faithful entrusted to your care! May Our Lady, Star of the East and Queen of the Syro-Malabar Church, intercede for us and guide us to her Son!

# தக்கலை மறைமாவட்டத்தின் 2024–2025 ஆண்டு அறிக்கை

## அறிமுகம்

1996 நவம்பர் 11 அன்று நிறுவப்பட்ட தக்கலை மறைமாவட்டம், இந்த ஆண்டு தனது 29 வருட நற்செய்திப் பணியை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. இந்த மறக்க முடியாத தினத்தை முன்னிட்டு, 2025 நவம்பர் 07, வெள்ளிக்கிழமை அன்று, மறைமாவட்டத்தின் மீதும், விசுவாசிகள், குருக்கள் மற்றும் துறவிகள் மீதும் இறைவன் பொழிந்த எண்ணற்ற ஆசீர்வாதங்களுக்கும் பாதுகாப்பிற்கும் நன்றி தெரிவித்து, எங்கள் அனைத்துப் பங்குகள் மற்றும் மடங்களில் ஒரு மணிநேரம் ஆராதனை நடத்தப்பட்டது. மறைமாவட்டம் முழுவதும் கடவுளின் ஆசீர்வாதத்தை வேண்டி, நாங்கள் எங்கள் ஆன்மீகப் பயணத்தில் ஏற்றுக்கொண்ட விசுவாசத்தையும், சாட்சிய வாழ்வையும் நினைவுபடுத்தும் விதமாக, மறைமாவட்டத்தின் ஆன்மீக மற்றும் முழுமையான வளர்ச்சியைப் பற்றிய ஓராண்டு அறிக்கையை உங்கள் முன் வைக்கிறேன்.

## 1. மறைமாவட்டத்தின் முக்கிய நிகழ்வுகள்

### A. 28 ஆவது மறைமாவட்ட தினக் கொண்டாட்டம்

1996 நவம்பர் 11 அன்று மறைமாவட்டம் நிறுவப்பட்ட தினத்தை நினைவுகூரும் வகையில், 28வது மறைமாவட்டதினம் 2024 நவம்பர் 10 அன்று கொண்டாடப்பட்டது. முந்தைய ஆண்டுகளைப் போலன்றி, முதல்முறையாக, இந்த கொண்டாட்டம் பங்கு அளவில் அனைத்து விசுவாசிகளின் பங்கேற்புடன் நடைபெற்றது. ஆடம்பர கூட்டுத் திருப்பலியைத் தொடர்ந்து பொதுக்கூட்டம் மற்றும் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடந்தேறின.

### B. சீரோ–மலபார் திருச்சபை மேனாள் உயர் பேராயர் மார் ஜார்ஜ் கர்தினாள் ஆலஞ்சேரி அவர்களின் வருகை

சீரோ-மலபார் சபையின் மேனாள் உயர்பேராயரும் நமது மறைமாவட்ட முதல் ஆயருமான மார் ஜார்ஜ் கர்தினல் ஆலஞ்சேரி, 2024 நவம்பர் 15 முதல் 22 வரை நம் மறைமாவட்டத்திற்கு வருகை தந்தார். அவர் முடிந்த அளவு நமது அனைத்துப் பங்குகளையும் பார்வையிட்டு, தனது ஆயர் காலத்தில் அவர் விதைத்த விதைகளின் பலன்களைக் கண்டார். அவர் குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் மற்றும் பல்வேறு பக்த சபைகள், துறைகள் சார்ந்த பிரதிநிதிகளைச் சந்தித்தார். மறைமாவட்டம் முழுவதும் நமது முதல் ஆயருக்கு நன்றியை தெரிவித்தனர்.

### C. மறைமாவட்ட நற்செய்திப் பெருவிழா

வருடந்தோறும் நடைபெறும் மறைமாவட்ட நற்செய்திப் பெருவிழா 2024 நவம்பர் 29, 30 மற்றும் டிசம்பர் 1 ஆகிய தேதிகளில் படந்தாலுமூடு திரு இருதய மறைவட்ட ஆலய வளாகத்தில் நடைபெற்றது. விசுவாசிகள் அதிக அளவில் பங்கேற்பதற்காகவும், வசதிக்காகவும், கடந்த ஆண்டு முதல் இரண்டு நாட்கள் மாலை நேரத்திலும், இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமை முழு நாள்

நிகழ்ச்சியாகவும் நடத்தப்பட்டது. தருமபுரி கார்மல் தியான மையத்தைச் சார்ந்த குழுவினர் மற்றும் CML மாணவர்களுக்கான தியானத்தை அருட்தந்தையர் மற்றும்அருட்சகோதரிகளும் வழிநடத்தினர். அருட்தந்தை ஸ்டீபன் தச்சில் CMI அவர்கள் தலைமை நற்செய்தியாளராக இருந்தார்.

### D. யூபிலி 2025 துவக்கம்

கிறிஸ்து யூபிலி 2025-இன் மறைமாவட்ட அளவிலான தொடக்க விழா 2024 டிசம்பர் 29 அன்று காலை 8:00 மணிக்கு 3 திருத்தலங்களில் ஒரே நேரத்தில் நடைபெற்றது: முஞ்சிறை புனித ஜார்ஜ் திருத்தலம், மாலைக்கோடு புனித சிலுவை திருத்தலம், மற்றும் நாகர்கோவில் புனித அல்போன்சா திருத்தலம் ஆகியவற்றில் விசுவாசிகள் யூபிலி சிலுவையை ஏந்தி, புனிதப் பயணத் தேவாலயங்களுக்கு ஒரு சிறப்புப் பவனியாகச் சென்றனர். பின்னர் யூபிலி மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டு, யூபிலி ஆண்டு துவங்கியது. அதைத் தொடர்ந்து, ஆடம்பர கூட்டு திருப்பலி மற்றும் யூபிலி ஜெபம் ஒப்புக்கொடுக்கப்பட்டது. மறைமாவட்ட அளவில் துவக்கப்பட்டதைப் போலவே, 2025 ஜனவரி 5 அன்று அனைத்துப் பங்குகளிலும் பங்கு அளவில் யூபிலி துவக்க விழா நடைபெற்றது.

### E. திருத்தந்தையுடன் சந்திப்பு

பாசமிகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை லியோ XVI அவர்களை 2025 மே 28 அன்று பொது சந்திப்பின் போது சந்தித்தார். இந்தச் சந்திப்பின் போது, கிறிஸ்துவ சபைக்காக அவர் மேற்கொள்ளும் புதிய பணிக்கு தமது செபங்களையும், நல்வாழ்த்துக்களையும், முழு மனதுடன் ஆதரவையும் அவர் தெரிவித்தார்.

### F. மறைமாவட்டங்களுக்கு இடையேயான சந்திப்பு (Inter-Eparchial Meet)

2025 ஜூன் 30 அன்று கன்னியாகுமரியில் உள்ள DM சபை கன்னியர் இல்ல ஸ்டெல்லா மேரிஸ் அரங்கத்தில் நடைபெற்ற மறைமாவட்டங்களுக்கு இடையேயான சந்திப்பை தக்கலை மறைமாவட்டம் முன் நின்று நடத்தியது. பாலா, காஞ்சிரப்பள்ளி, தக்கலை மற்றும் சங்ஙனாச்சேரி மறைமாவட்டங்களின் ஆயர்கள் மற்றும் குருக்கள் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்கக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

### G. குருக்கள் மற்றும் துறவிகள் சங்கமம்

இந்த ஆண்டுக்கான குருக்கள் மற்றும் துறவிகள் சங்கமம் 2025 அக்டோபர் 2 அன்று கிறிஸ்துராஜபுரம் கிறிஸ்துராஜா ஆலயத்தில் நடைபெற்றது. இதில் யூபிலி கொண்டாடும் துறவிகள் கௌரவிக்கப்பட்டனர். சிஸ்டர் தெரஸ் CMC தனது பொன்விழாவையும், சிஸ்டர் ஜூலிட் மரியா ளுயுடீளு, சிஸ்டர் வளனரசி SDS, மற்றும் சிஸ்டர் இம்மானுவேல் HC ஆகியோர் தங்கள் வெள்ளி விழாவையும் கொண்டாடினர்.

### H. பேரருட்தந்தை தாமஸ் பௌவத்துப்பரம்பில் அவர்களுக்கு நன்றி

கடந்த ஆறரை ஆண்டுகளாக மறைமாவட்டத்தின் குருகுல முதல்வராக தனது செழுமையான அனுபவத்துடனும், ஆன்மீக பலத்துடனும் நம்மை வழிநடத்திய

முன்னாள் குருகுல முதல்வர் பேரருட்தந்தை தாமஸ் பௌவத்துப்பரம்பில் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகள். புதிய குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்.

### I. ஜெபமாலைப் பவனி

ஒவ்வொரு ஆண்டும், அக்டோபர் மாதம் மாதா வணக்கத்தை சிறப்பிக்கும் விதமாக மரியாயின் சேனை (Legion of Mary) தலைமையில் மறைமாவட்ட ஜெபமாலை பவனி நடைபெறுகிறது. இந்த ஆண்டு, மறைமாவட்டத்தில் மரியாயின் சேனை கெமத்சியம் நிறுவப்பட்டதன் வெள்ளி விழா கொண்டாட்டத்தின் துவக்கத்துடன் இணைந்து இந்த நிகழ்வு நடைபெற்றது. இந்த பவனி 2025 அக்டோபர் 26 அன்று மஞ்சாலுமூடு புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயத்தில் இருந்து மாலைக்கோடு புனித சிலுவை திருத்தலத்திற்குச் சென்றது.

### J. குருக்கள் பேரவை மற்றும் அருட்பணிப் பேரவைகள்

2வது குருக்கள் பேரவையின் மூன்றாவது பொதுக்குழு கூட்டம் 2025 ஜூலை 25 அன்று சங்கமத்தில் நடைபெற்றது. 7வது அருட்பணி பேரவையின் மூன்றாவது கூட்டம் 2025 மே 01 அன்று சங்கமத்தில் நடைபெற்றது.

## 2. குருக்கள்

### A. புதிய அருட்தந்தையர்கள்

- 2025 ஜனவரி 2 அன்று இடுக்கி, தன்னிக்கண்டம் புனித மேரிஸ் ஆலயத்தில் திருதொண்டர் வர்கீஸ் (அமாண்டோ) எடக்கூட்டத்தில் குருவாக அருட்பொழிவு செய்யப்பட்டார்.
- 2025 ஏப்ரல் 30 அன்று கிள்ளியூர் தேவமாதா ஆலயத்தில் திருத்தொண்டர் சுனில் ஆண்டனி குருவாக அருட்பொழிவு செய்யப்பட்டார்.
- 2025 மே 03 அன்று கடுந்துருத்தி புனித மேரிஸ் மறைவட்ட ஆலயத்தில் திருத்தொண்டர் அகஸ்டின் (அனூப்) தத்தம் பள்ளி குருவாக அருட்பொழிவு செய்யப்பட்டார்.

### B. பணி மாறுதல்

- அருட்தந்தை ஜோசப் கூவல்லூர்
- அருட்தந்தை அகஸ்டின் தலோடில்
- அருட்தந்தை மார்ட்டின் கண்டம்பறம்பில் MST
- அருட்தந்தை மைக்கேல் ஆரோக்கியசாமி SDB
- அருட்தந்தை சாக்கோ புதியபரம்பில்
- அருட்தந்தை ஜேம்ஸ் (க்ஷான்) அயல்லூர்
- அருட்தந்தை தாமஸ் பொத்தன்பரம்பில் MCBS

C. மறைமாவட்டத்திற்கு வரவேற்பு

- அருட்தந்தை ஐசக் குரிச்சியேல்
- அருட்தந்தை ஜான் (ஜியோ) ஊரோத்
- அருட்தந்தை ஜோசப் (ஜோபின்) வெட்டுகல்லேல்
- அருட்தந்தை செபாஸ்டியன் (ஜிஜி) புதன்புரக்கல்
- அருட்தந்தை போபி கொச்சுப்பரம்பில் MST
- அருட்தந்தை வர்கீஸ் கோட்டூர் CMI
- அருட்தந்தை ஜோ ஏஞ்சலோ SDB
- அருட்தந்தை டொமினிக் முண்டாட் MCBS

D. மறைமாவட்டத்திற்கு வரவேற்பு

அனைத்துக் குருக்களின், குறிப்பாக மறைமாவட்டக் குருக்களின் பாதுகாவலரான புனித மரிய ஜான் வியானியின் திருவிழா 2025 ஆகஸ்ட் 04 அன்று முக்கூட்டுக்கல் புனித மேரிஸ் இளங்குருக்கள் மடத்தில் அர்த்தமுள்ள வகையில் அனுசரிக்கப்பட்டது.

E. குருக்களுக்கான வருடாந்திர தியானம்

குருக்களுக்கான வருடாந்திர தியானம் 2025 அக்டோபர் 05 முதல் 10 வரை சங்கமத்தில் நடைபெற்றது. அருட்தந்தை ஜில்சன் மேத்யூ VC அவர்கள் இந்த தியானத்தை வழிநடத்தினார்.

F. அருட்தந்தை ராபின்ஸ் குழிகோடில் அவர்களுக்கு வாழ்த்துக்கள்

அருட்தந்தை ராபின்ஸ் குழிகோடில் எம்.ஜி. பல்கலைக்கழகத்தில் சினிமா மற்றும் தொலைக்காட்சியில் முதலிடத்துடன் தனது எம்.ஏ. படிப்பை வெற்றிகரமாக நிறைவு செய்தார். அவருடைய வெற்றிகரமான படிப்பு நிறைவிற்கு எங்களின் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**4. குருக்கள்**

- 2024 நவம்பர் 19 அன்று தேர்ந்தெடுக்கப்பட்ட FCC சான்ஜோ பிராவின்ஸ், தக்கலையின் புதிய பிராவிஸ்கூஷியல் குழுவிற்கு வாழ்த்துக்களும் செபங்களும்.
- 2024 டிசம்பர் 14 அன்று தேர்ந்தெடுக்கப்பட்ட CMC சாவறா பிராவின்ஸ், தக்கலையின் புதிய பிராவிஸ்கூஷியல் குழுவிற்கு வாழ்த்துக்களும் செபங்களும்.
- 2024 டிசம்பர் 16 அன்று தேர்ந்தெடுக்கப்பட்ட SABS புனித சாந்தால் பிராவின்ஸ், தக்கலையின் புதிய பிராவிஸ்கூஷியல் குழுவிற்கு வாழ்த்துக்களும் செபங்களும்.
- 2025 ஜனவரி 23 முதல் தக்கலை மறைமாவட்டத்தின் CRI-இன் புதிய

அலுவலகப் பொறுப்பாளர்கள் சிஸ்டர் ஜெஸ்ஸி தெரேஸ் CMC (தலைவர்), அருட்தந்தை மேத்யூ அரேக்களம் CMI (துணைத் தலைவர்), சிஸ்டர் வளன் அரசி SDS (செயலாளர்), சிஸ்டர் லின்ஸ் SABS (இணைச் செயலாளர்) மற்றும் சிஸ்டர் ஆன்கிரேஸ் FCC (பொருளாளர்) ஆகியோருக்கு வாழ்த்துக்கள்.

- 2025 மே 08 அன்று சங்ஙனாச்சேரி SH புனித மேத்யூ பிராவின்சைச் சேர்ந்த சிஸ்டர் S.ஜெனிபா, மாறப்பாடியில் உள்ள புனித தோமையார் ஆலயத்தில் துறவற ஆடையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு, தனது முதல் உறுதிமொழியை அளித்தார்.
- 2025 மே 13 அன்று CMC சாவறா பிராவின்ஸ், தக்கலையைச் சேர்ந்த சிஸ்டர் இவானாகிறிஸ் CMC, காரோட்டில் உள்ள புனித சூசையப்பர் ஆலயத்தில் துறவற ஆடையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு, தனது முதல் உறுதிமொழியை அளித்தார்.
- 2025 ஜூன் 14 அன்று கல்லுவிளை ஆசீர் அரங்கத்தில் துறவிகளின் கிறிஸ்து யூபிலி கொண்டாட்டம் நடைபெற்றது.
- சங்ஙனாச்சேரி உயர் மறைமாவட்டத்தின் மார்த்தோமா வித்யானிகேதனில் இருந்து சமய அறிவியலில் இளங்கலை பட்டம் வெற்றிகரமாகப் பெற்ற சிஸ்டர் அர்ச்சனா FCC மற்றும் சிஸ்டர் கிறிஸ்டி மரியா CMC ஆகியோருக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்.
- கடந்த மூன்று ஆண்டுகளாக பெருஞ்சிலம்பு LSDP மடத்தில் உள்ளூர் சுப்பீரியராகப் பணியாற்றி வந்த, LSDP சபையின் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சுப்பீரியர் ஜெனரல் அருட்சகோதரி ஜின்சி LSDP அவர்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்.
- 2025 நவம்பர் 08 அன்று பெருஞ்சிலம்பு புனித தோமையார் ஆலயத்தில், குன்னம்தானம் LSDP சபையைச் சேர்ந்த சிஸ்டர் மேரி டெஸா LSDP, துறவர ஆடையை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு, தனது முதல் உறுதிமொழியை அளித்தார்.

## 5. குருக்கள்

- இளங்குருமடம் : கிறிஸ்து யூபிலி ஆண்டு 2025-இன் ஒரு பகுதியாக, குருத்துவக் கல்லூரியின் இல்ல தினத்துடன் இணைந்து இளங்குருமட மாணவர்களின் யூபிலி 2025 பிப்ரவரி 01 அன்று முக்கூட்டுக்கல் புனித மேரிஸ் இளங்குருத்துவ மடத்தில் வைத்து கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வின் போது 2024-2025 கல்வியாண்டுக்கான குருத்துவக் கல்லூரி இதழும் வெளியிடப்பட்டது.

➔ <u>உயர்குருமடம்</u>

சகோதரர் யூபின் ஜோசப் 2025 மார்ச் 27 அன்று ரோமில் ஆயர் மார்

போஸ்கோ புத்தூர் அவர்களிடமிருந்து ஹேயூப்பாதியாகோன் என்னும் சிறிய பட்டத்தைப் பெற்றார்.

2025 ஏப்ரல் 14 காலை 7:00 மணிக்கு சங்கமத்தில் சிறிய பட்டங்கள் வழங்கப்பட்டன. விழாவில் சகோதரர் ஆண்டனி ராஜ், சகோதரர் செபாஸ்டியன் (சிபின் சி.கே.), மற்றும் சகோதரர் செபாஸ்டியன் (மெல்வின்) ஆகியோர் காறோயப் பட்டம் பெற்றனர். சகோதரர் சாலமன் (காட்வின் கிறிஸ்துதாஸ்) கரேயூசாவின் சிறிய பட்டத்தையும், சகோதரர் டெனிஸ் (டிவின் ராஜ்) ஹேயூப்பாதியாக்னூசாவின் சிறிய பட்டத்தையும் பெற்றனர்.

2025 ஏப்ரல் 15 அன்று பறைக்கோடு கிறிஸ்து அரசர் ஆலயத்தில், சகோதரர் வர்கீஸ் கொயிக்கக்குடியிட, சகோதரர் ஜோசப் வெட்டக்கோணம், மற்றும் சகோதரர் மாத்யூ கல்லம்பரம்பில் ஆகியோருக்கு திருத்தொண்டர் பட்டத்தின் பெரிய பட்டம் வழங்கப்பட்டது.

மறைமாவட்டத்தின் அனைத்து பெரிய குருத்துவ மாணவர்களுக்காகவும் 2025 மே 12 முதல் 16 வரை சங்கமத்தில் ஒரு வார கால திறன் மேம்பாட்டுப் பயிற்சி நடத்தப்பட்டது. எதிர்காலப் பணிகளுக்குப் பயனுள்ள பல்வேறு பாடங்களில் நடைமுறை அறிவை வழங்குவதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டு அமைந்தது.

### 6. ஆலய அர்ச்சிப்பு மற்றும் மந்திரிப்பு

- புதிதாக கட்டப்பட்ட பறைக்கோடு ஆலயம் சீரோ-மலபார் சபையின் மேனாள் உயர்பேராயர் மார் ஜார்ஜ் கர்தினல் ஆலஞ்சேரி அவர்களால் 2024 நவம்பர் 16 அன்று அர்ச்சிக்கப்பட்டது.
- குலசேகரம் புனித இரண்டாம் ஜான் பால் ஆலயம் புதிதாகக் கட்டப்பட்டு 2025 பிப்ரவரி 02 அன்று அர்ச்சிக்கப்பட்டது.
- மார்த்தாண்டத்தில் புதிதாக கட்டப்பட்ட ஆலயம் 2025 பிப்ரவரி 09 அன்று அர்ச்சிக்கப்பட்டது. இது புனித வின்செண்ட் டி பால் மிக்ஷன் என்று அழைக்கப்படுகிறது.
- 2025 பிப்ரவரி 11 அன்று லூர்து அன்னையின் திருவிழாவின் போது, பறைக்கோடு கிறிஸ்து அரசர் ஆலயத்தின் புதிதாகக் கட்டப்பட்ட குருசடி மந்திரிக்கப்பட்டது.
- 2025 பிப்ரவரி 23 அன்று பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயத்தின் புதிதாகக் கட்டப்பட்ட கல்லறைத் தோட்ட சிற்றாலயம் மந்திரிக்கப்பட்டது.
- 2025 மார்ச் 15 அன்று முக்கூட்டுக்கல் SH மடத்தின் புதுப்பிக்கப்பட்ட சிற்றாலயம் மந்திரிக்கப்பட்டது.
- தெற்றிவிளையில் புதிதாகக் கட்டப்பட்ட புனித மிக்கேல் ஆலயம் 2025 மே 04 அன்று அர்ச்சிக்கப்பட்டது.
- 2025 மே 05 அன்று சேனம்கோடில் அசிசி FCC மடத்தின் புதிய கட்டிடம்

மந்திரிக்கப்பட்டது.

- 2025 ஜூன் 5 அன்று மாலைக்கோடு SH மடத்தின் புதுப்பிக்கப்பட்ட சிற்றாலயம் மந்திரிக்கப்பட்டது.
- 2025 ஜூன் 13 அன்று சீரோ-மலபார் சபையின் உயர் பேராயர் மார் ஃ ரபேல் தட்டில் அவர்களால், மூலமற்றம் சிநேக வில்லாவில் உள்ள நோய்ப் பராமரிப்புப் பிரிவிற்கான புதிய கட்டிடம் மந்திரிக்கப்பட்டது.
- 2025 ஆகஸ்ட் 30 அன்று ஆறுகாணியில் உள்ள புதுப்பிக்கப்பட்ட SH மடம் மந்திரிக்கப்பட்டது.
- கட்டாத்துறை புனித மிக்கேல் ஆலயத்தின் புதுப்பிக்கப்பட்ட குருசடி மற்றும் சிற்றாலயம் 2025 செப்டம்பர் 14 அன்று மந்திரிக்கப்பட்டது.
- 2025 செப்டம்பர் 16 அன்று பெங்கிரியில் உள்ள புதுப்பிக்கப்பட்ட புனித பெனடிக்ட் ஆலயம் அர்ச்சிக்கப்பட்டது.

## 7. யூபிலி கொண்டாட்டங்கள்

- 2024 நவம்பர் 21 அன்று பெங்கிரி புனித பெனடிக்ட் ஆலயத்தின் வெள்ளி விழா துவக்கம் நடைபெற்றது.
- 2024 டிசம்பர் 31 அன்று வாஞ்சிநகர் புனித மேரிஸ் ஆலயத்தின் வெள்ளி விழா துவக்கம் நடைபெற்றது.
- 2025 ஜூன் 22 அன்று பள்ளிக்கோணம் திரு இருதய ஆலயம், பங்குத் திருவிழாவோடு இணைந்து தனது பொன்விழாவை மகிழ்ச்சியுடன் கொண்டாடியது. சீரோ-மலபார் சபை மேனாள் உயர்பேராயர் மார் ஜார்ஜ் கர்தினல் ஆலஞ்சேரி நன்றித் திருப்பலிக்கு தலைமை தாங்கினார்.
- 2025 செப்டம்பர் 21 அன்று வட்டக்கோட்டையில் புனித மேரிஸ் திருத்தொண்டு தள சுகாதார சேவை மையம் 25 ஆண்டுகள் பணி நிறைவை மகிழ்ச்சியுடன் கொண்டாடியது.
- 2000 செப்டம்பர் 30 அன்று நிறுவப்பட்ட சேனம்கோடு அசிசி வித்யாலயா, மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் பள்ளி தனது பணியின் 25 ஆண்டுகளை வெற்றிகரமாக நிறைவு செய்து, 2025 செப்டம்பர் 27 அன்று தனது வெள்ளிவிழாவை கொண்டாடியது.

## 8. விரிவாக்கப்பட்ட திருத்தொண்டுத் தளங்களின் முக்கிய நிகழ்வுகள்

- 2025 மார்ச் 05 அன்று கல்லுவிளை KKSSS-ல் வைத்து கயத்தாறு மற்றும் விருதுநகர் திருத்தொண்டு தளங்களின் மகளிர் தினத்தை கொண்டாடியது. பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில், KKSSS ஒவ்வொரு திருத்தொண்டு தளங்களிலிருந்தும் 20 பெண்களுக்கு தையல் இயந்திரங்களை விநியோகித்து, சுயவேலைவாய்ப்புக்கான வாய்ப்புகளை வழங்கியது.

- 2025 மார்ச் 07 அன்று மாலை 6:00 மணிக்கு கம்பம் திருத்தொண்டு தளத்தில் அங்கூர்பாளையம் கிராமத்தில் ஒரு கிராமக் கொண்டாட்டம் நடைபெற்றது.
- 2025 ஏப்ரல் 13 அன்று கயத்தாறு திருத்தொண்டு தளத்தில் புதிதாக கட்டப்பட்ட ஆலயமும், குருக்கள் இல்லமும் மந்திரிக்கப்பட்டது. இந்த ஆலயம் மறைமாவட்டத்தில் புனித செபாஸ்டியன் பெயரில் அர்ப்பணிக்கப்பட்ட முதல் ஆலயமாகும். குருக்கள் இல்லத்திற்கு திவ்யநற்கருணை இல்லம் என பெயரிடப்பட்டது.
- 2025 ஏப்ரல் 17 அன்று (பெசஹா வியாழன்) சுந்தரபாண்டியபுரத்தில் புதிதாக நிறுவப்பட்ட சகாய மாதா திருத்தொண்டு தளம் ஆலயம் மந்திரிக்கப்பட்டது.
- 2025 ஜீன் 12 அன்று மதுரை, ஆரியூர் புனித மேரிஸ் ஆலயத்தில் மறைமாவட்டத்தின் மிக்ஷனரிகளுக்கான கிறிஸ்து யூபிலி கொண்டாட்டம் நடைபெற்றது.
- 2025 செப்டம்பர் 07 அன்று சுந்தரபாண்டியபுரத்தில் உள்ள புதுப்பிக்கப்பட்ட சகாய மாதா ஆலயம் அர்ச்சிக்கப்பட்டது.
- 2025 அக்டோபர் 19 அன்று தென்காசி மிக்ஷனில் ஜெபமாலை பவனி நடத்தப்பட்டது.
- திருநெல்வேலி, கயத்தாறு, ஆம்பூர், விருதுநகர், மதுரை , தேனி, கம்பம், இரமநாதபுரம் ஆகிய விரிவாக்கப்பட்ட திருத்தொண்டு தளங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**9. துறைகள் மற்றும் பக்த சங்கங்கள்**

- 2024 நவம்பர் 17 இல் மார் ஜார்ஜ் கர்தினல் ஆலஞ்சேரி அவர்கள் முன்னிலையில் திருத்துவபுரம் ஹோலி ட்ரினிட்டி மூவொரு போராலயத்திலிருந்து படந்தாலுமூடு திரு இருதய மறைவட்ட ஆலயம் வரை CML பேரணி நடைபெற்றது.
- 2024 நவம்பர் 24 அன்று மாதர் ஜோதிஸ் சார்பில் படந்தாலுமூடு திரு இருதய மறைவட்ட ஆலய அரங்கத்தில் தாய்மார்களுக்காக மறைமாவட்ட அளவிலான நடனப்போட்டி நடந்தது.
- கிறிஸ்து யூபிலி ஆண்டு 2025-இன் ஒரு பகுதியாக, மறைமாவட்ட நல்வாழ்வு பணிக்குழு 2025 பிப்ரவரி 10 அன்று பிலாங்காலை புனித குழந்தை தெரசா மறைவட்ட ஆலயத்தில் நோயாளிகளின் தினத்தை சிறப்புடன் நடத்தியது.
- SMYM-இன் கிறிஸ்து யூபிலி கொண்டாட்டம் மற்றும் யூபிலி திட்டத்தின் துவக்க விழா 2025 பிப்ரவரி 16, ஞாயிற்றுக்கிழமை முஞ்சிறை புனித ஜார்ஜ் திருத்தலத்தில் நடைபெற்றது.
- கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் (KKSSS) அதன் பிரிவான AIDACT

மூலம், 2025 பிப்ரவரி 22 அன்று கல்லுவிளை அசீர் அரங்கத்தில் குழந்தைகளை கௌரவிப்பதன் மூலம் கிறிஸ்து யூபிலி 2025 ஐக் கொண்டாடியது.

- 2025 மார்ச் 08 அன்று KKSSS கல்லுவிளையில் மகளிர் தினத்துடன் இணைந்து பெண்களின் யூபிலியை கொண்டாடியது.
- மறைமாவட்ட புலம்பெயர்ந்தோர் பணிக்குழுவின் முதல் பெங்களூர் சங்கமம் 2025 மார்ச் 16 அன்று பெங்களூர் தர்மாராம் புனித தோமையார் மறைவட்ட ஆலயத்தில் நடைபெற்றது.
- மறைமாட்ட மறைக்கல்வி மன்றம் பள்ளிப்படிப்பை முடித்த XI மற்றும் XII வகுப்பு மாணவ-மாணவிகளுக்கு 'HOPE' என்ற தலைப்பில் மூன்று நாள் உள்ளிருப்பு முகாமை 2025 மே 20, 21, 22 அன்று சூசைபுரம் புனித அல்போன்சா கல்லூரி வளாகத்தில் நடத்தியது.
- மறைமாவட்டப் பள்ளி ஆசிரியர்களுக்கான கிறிஸ்து யூபிலி கொண்டாட்டம் ஆசிரியர் மாநாட்டோடு இணைந்து 2025 மே 30 அன்று கல்லுவிளை சீனாய் தியான மையத்தில் நடைபெற்றது.
- மறைமாவட்ட மறைக்கல்வி மன்ற கிறிஸ்து யூபிலி கொண்டாட்டம், மறைக்கல்வி மற்றும் குழந்தை ஈசோ இயக்கத்தின் (KII) கல்வி ஆண்டு துவக்கத்துடன் இணைந்து 2025 மே 31 அன்று கல்லுவிளையில் நடைபெற்றது.
- குழந்தை ஈசோ இயக்கம் (KII) அதன் கிறிஸ்து யூபிலி கொண்டாட்டத்தையும் ஆண்டுவிழாவையும் 2025 ஜூன் 22 அன்று கல்லுவிளையில் நடத்தியது.
- தக்கலை மறைமாவட்டத்தின் சீரோ-மலபார் இளையோர் இயக்கம் (SMYM) 2025 ஜூன் 27 முதல் 29 வரை சங்கமத்தில் இளைஞர்களுக்காக மூன்று நாள் தலைமைத்துவ பயிற்சி முகாமை நடத்தியது.
- மறைமாவட்ட அளவில் உறவியங்களின் கிறிஸ்து யூபிலி கொண்டாட்டம் 2025 செப்டம்பர் 21 அன்று கல்லுவிளை ஆசீர் அரங்கத்தில் நடைபெற்றது.

**10. இவ்வருடம் இறையடி சேர்ந்த இறையடியார்கள்**

- திருத்தந்தை போப் பிரான்சிஸ் - 21 ஏப்ரல் 2025
- அருட்சகோதரி மரியா கோரெட்டி SH - 25 பிப்ரவரி 2025
- அருட்சகோதரி ஆலிஸ் விஜி CMC - 17 மார்ச் 2025
- அருட்சகோதரி எல்சி மேத்யூ செங்காண்டயில் SDS - 20 மார்ச் 2025
- அருட்சகோதரி பிரிட்ஜெட் பால் தெக்கேபரம்பில் SDS - 21 மார்ச் 2025
- அருட்தந்தை ஜோஸ் கூலிப்புரக்கல் CMI - 29 மார்ச் 2025
- அருட்தந்தை ஜார்ஜ் தேவலக்கரை CMI - 03 ஏப்ரல் 2025

- அருட்தந்தை செபாஸ்டியன் பினல் CMI - 21 ஏப்ரல் 2025
- அருட்சகோதரி ஹெலினா கோம்பனதோட்டத்தில் SDS - 14 மே 2025
- அருட்தந்தை செபாஸ்டியன் பனச்சிக்கல் - 21 மே 2025
- அருட்சகோதரி மெர்லின் ஜோஸ் CMC - 31 மே 2025
- அருட்சகோதரி மேரி ஜோசப் OMMI - 14 ஜூலை 2025
- அருட்தந்தை ஜோசப் மடத்தில் - 08 ஆகஸ்ட் 2025
- அருட்சகோதரி ஜோசியா SDS - 17 செப்டம்பர் 2025
- அருட்சகோதரி சோபியா சாக்கோ SDS - 24 செப்டம்பர் 2025
- அருட்சகோதரி மேரி தோமஸ் SDS - 06 அக்டோபர் 2025
- அருட்சகோதரி தெரசா ஜோசப் SDS - 13 அக்டோபர் 2025

**11. முடிவுரை**

மறைமாவட்ட ஓராண்டு பணிகளுக்கு இறையாசீரைப் பொழிந்து நம்மை வழிநடத்திய எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி அர்ப்பித்து, மறைமாவட்ட பணிகளை ஒருங்கிணைத்து வாழ்த்திய மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB. குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் மற்றும் மறைமாவட்ட பொருளாளர் பேருட்தந்தை சுபின் புத்தன்புரக்கல் ஆகியோருக்கு வாழ்த்துகூறி, மறைமாவட்ட செயல்பாடுகள் பயன்மிக்கதாய் அமைய உழைத்த அனைத்து அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் நல்லுள்ளம் கொண்ட உதவியாளர்கள் மற்றும் மறைமாவட்ட பொதுநிலையினர் அனைவரையும் நன்றியோடு நினைவு கூர்ந்து, இவ்வறிக்கையை இவ் அவையின்கண் சமர்ப்பிக்கின்றேன். நன்றி.

05.11.2025 — அருட்தந்தை ஜோஷி குளத்துங்கல்

தக்கலை — ஆவண காப்பாளர்




"உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைசாற்றுங்கள்."
(மாற் 16:15)

**அறிவிப்பதை கேட்டால் தான் நம்பிக்கை உண்டாகும். கிறிஸ்துவைப் பற்றிய செய்தி அறிவிக்கப்பட்டால் தான் அதைக் கேட்க வாய்ப்புண்டு.**
**( உரோமையர் 10:17 )**

அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துக்கள்!

## தலைமையாசிரியர்களின் கூட்டம்

நமது மறைமாவட்ட மறைக்கல்வி தலைமையாசிரியர்களின் கூட்டம் 2025 நவம்பர் 01 சனிக்கிழமையன்று பிற்பகல் 2.30 மணிக்கு கல்லுவிளை நற்செய்தி நிலைய அலுவலக அரங்கில் வைத்து இயக்குநர் அருட்தந்தை. அபிலாஷ் அவர்களின் தலைமையில் துய ஆவிப்பாடலுடன் ஆரம்பமானது. தொடர்ந்து அருட்தந்தை அபிலாஷ் சேவியர் அவர்கள் மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான அடிப்படை பயிற்சி வகுப்பில் 7 நாட்களும் என்னென்ன வகுப்புகள் என்பதைப்பற்றியும் விவிலியக் கலைவிழாவைப் பற்றியும் Mission Quest 2025 பற்றியும் விளக்கிக்கூறினார். தொடர்;ந்து மறைக்கல்வியின் தலைமையாசிரியர்களின் கடமைகள் என்னென்ன என்பதைப்பற்றி சிந்திக்கவும் மறைக்கல்வியின் வளர்ச்சிக்கு தேவையான புது முயற்சிகளை எடுக்கவும் வேண்டிய கருத்துக்கனை முன்வைத்தார் மேலும் இக்கூட்டத்தின் போது வகுப்பு ½ முதல் 12 வரையுள்ள மாணவர்களுக்கான 1-ஆம் பருவத்தேர்வு வினாத்தாள் அனைத்து மறைக்கல்வி நிலையங்களுக்கும் வழங்கப்பட்டது. மேலும் இக்கூட்டத்தின் போது மறைமாவட்ட அளவில் நடைபெற்ற விவிலியக் கலைவிழா எழுத்துப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் பெயர் விபரம் வாசிக்கப்பட்டது. இக்கூட்டத்தின் போது அனைத்து



தலைமையாசிரியர்களும் கலந்துக்கொண்டு சிறப்பித்தனர் தொடர்ந்து நன்றியுரை மற்றும் செபத்துடன் கூட்டமானது 4.30 மணியளவில் இனிதே முடிவுற்றது. பின்னர் அனைவருக்கும் தேனீர் விருந்து வழங்கப்பட்டது.

## 1-ஆம் பருவத்தேர்வு

2025-26 ஆம் ஆண்டு மறைக்கல்வி வகுப்பு ½ முதல் 12 வரையுள்ள



மாணவர்களுக்கான 1- ஆம் பருவத்தேர்வு நவம்பர் 02 ஞாயிற்றுக்கிழமை அனைத்து மறைக்கல்வி நிலையங்களிலும் நடைபெற்றது.

## MISSION QUEST 2025

திருச்சபை மற்றும் திருத்தொண்டு பணிகளை ஆழமாக அறிந்திட இணையம் வாயிலான வினாடி வினாப்போட்டி சீரோ மலபார் திருத்தூது நிலையம் மற்றும் சீரோ மலபார் மறைக்கல்வி ஆணையம் இணைந்து நடத்தப்பட்டு வருகிறது. இவ்வருட MISSION QUEST, நமது நற்செய்தி நிலையத்தின் வாயிலாக 2025 நவம்பர் 08 சனிக்கிழமை இரவு 6.00 மணிக்கு 45 நிமிடங்கள் நடைபெற்றது. இப்போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு மறைக்கல்வி மாணவ மாணவிகள் மற்றும் பெரியோர்கள் என இரு பிரிவுகளாக வழங்கப்படும். ஊலகளாவிய சீரோ மலபார் திருச்சபை அளவில் வெற்றி பெறுபவர்களுக்கு 1 –ம் பரிசு – 10000, 2-ம் பரிசு – 5000, 3-ம் பரிசு -3000 மற்றும் சான்றிதழ் வழங்கப்படும். இப்போட்டியில் நமது மறை மாவட்டத்தின் சார்பாக மறைக்கல்வி மாணவ மாணவிகள் மற்றும் பெரியோர்கள் பங்கு பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. பங்கு பெற்ற அனைவருக்கும் நற்செய்தி நிலையத்தின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

## ஊக்குவிப்பாளர்களின் கூடுகை

2025 -2026 ஆம் மறைக்கல்வி ஆண்டு செயல்படுத்த வேண்டிய செயல்

திட்டங்கள் மற்றும் விவிலியக்கலை விழாவைப் பற்றி கலந்துரையாடவும் 2- ஆவது பார்வையிடுதல் குறித்து தேவையான ஆலோசனைகள் வழங்கவும் ஊக்குவிப்பாளர்களின் கூடுகையானது 2025 நவம்பர் 22 சனிக்கிழமை பிற்பகல் 3.15 மணி முதல் 6.30. மணி வரை கல்லுவிளை நற்செய்தி நிலையத்தில் வைத்து மறைமாவட்ட குருகுல முதல்வர் போருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்களின் தலைமையிலும் இயக்குநர் அருட்தந்தை. அபிலாஷ் அவர்களின் முன்னிலையிலும் செபத்துடன் ஆரம்பமானது. இக்கூடுகையின் போது இயக்குநர் அவர்கள் புதிதாக பொறுப்பேற்ற குருகுல முதல்வரையும், பங்கேற்றவர்களையும் வாழ்த்தி வரவேற்று உரை நிகழ்த்தினார். தொடர்ந்து ஊக்குவிப்பாளர்கள் அவர்கள் பார்வையிட்ட மறைக்கல்வி நிலையங்களைப்பற்றி ஒவ்வொருவரும் எடுத்துக்கூறினர். மேலும் இனிமேல்



நடக்கவிருக்கும் நிகழ்வுகளைப்பற்றியும் செய்ய வேண்டிய செயல் திட்டங்களை முன் வைத்தும் கலந்துரையாடப்பட்டது. இக்கூடுகையின் போது குரு குல முதல்வர் போரருட்தந்தை அவர்கள் ஊக்குவிப்பானர்கள் மறைக்கல்வி நிலையங்கள் மற்றும் மாணவர்களின் வளர்ச்சியை ஊக்கப்படுத்த வேண்டும் என்றும் உரை நிகழ்த்தினார். பின்னர் ஊக்குவிப்பாளர் அருட்சகோதரி அல்போன்சா CMC அவர்களின் நன்றியுரை மற்றும் செபத்துடன் இக்கூடுகை மாலை 6.00 மணிக்கு இனிதே முடிவுற்றது.

## விவிலியக்கலைவிழா 2025-26 மறைமாவட்ட எழுத்துப்போட்டிகள்

2025-26 ஆம் ஆண்டிற்கான விவிலியக்கலைவிழாவின் பகுதியாக நடத்தப்படும் ஓவியம் மற்றும் இலக்கியப்போட்டிகள் மறைமாவட்ட அளவில் அக்டோபர் 23 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணி முதல் 4.30 மணி வரை நடைபெற்றது. மறைவட்ட அளவில் நடைபெற்ற போட்டியில் முதலிடம் மற்றும் இரண்டாமிடம் பெற்ற மாணவர்கள் இப்போட்டிகளில் பங்குபெற்றனர். போட்டிகள் அனைத்தும் மறைமாவட்ட இயக்குநர் தலைமையிலும்

மறைவட்ட செயலர் அருட்சகோதரிகள் மற்றும் அலுவலக செயலர் மற்றும் ஊக்குவிப்பாளர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது. இந்த வருடம் தென்காசி



மறைவட்டத்திலுள்ள மாணவர்கள் இப்போட்டிகளில் பங்கு பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போட்டிகளில் 8 மறைவட்டங்களிலுமாக மொத்தம் 192 மாணவர்கள் பங்கு பெற்றனர்.

## விவிலியக் கலைவிழா தென்காசி மறைவட்டம்

நமது மறைக்கல்வி 2025 – 2026 –ஆம் ஆண்டு தென்காசி மறைவட்ட விவிலியக் கலைவிழா கலைப்போட்டிகள் 2025 நவம்பர் 30 ஞாயிற்றுக்கிழமை புதூர் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் வைத்து நடத்தப்பட்டது பிற்பகல் 1.00 மணிக்கு பெயர் பதிவும் தொடர்ந்து 1.30 மணிக்கு மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை அபிலாஷ் அவர்களின் தலைமையிலும் தென்காசி மறைவட்ட இயக்குநர் அருட்தந்தை அமென்டோ மற்றும் அருட்தந்தை சுமேக்ஷ் அவர்களின் முன்னிலையிலும் துவக்க விழா நடந்தது. தென்காசி மறைவட்ட இயக்குநர் அவர்கள் நற்செய்தி நிலையத்திலிருந்து கலைப்போட்டிகள் நடத்துவதற்காக வருகை தந்துள்ள இயக்குநர் அருட்தந்தை அவர்களையும், அருட்சகோதரி ஜெய்சி மற்றும் செல்வி சுஜா அவர்களையும், மற்றும் ஊக்குவிப்பாளர்களான திரு. ஜோண் பிறைட், திரு.விஜயகுமார், திரு. அபீஸ் ஆகியோரையும் வாழ்த்தி வரவேற்புரை கூறினார். கலைப்போட்டிகள் அனைத்தும் 4 அரங்குகளில் வைத்து பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை நடைபெற்றது. தென்காசி மறைவட்ட் 6 பங்குகளிலிருந்தும் 60 மாணவர்கள்



போட்டிகளில் கலந்துக்கொண்டனர். போட்டிகள் அனைத்தும் தென்காசி மறைத்தள ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை டென்சி முண்டுநடைக்கல் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. நிறைவு விழாவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குபரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. மேலும் பேரருட்தந்தை. பிலிப்பு கொடியந்தறை அவர்களின் நினைவாக நற்செய்தி நிலையத்திலிருந்து வழங்கப்பட்ட சுழற்கோப்பை இவ்வருடம் அதிக புள்ளிகள் பெற்ற புளியறை சிறுமலர் மறைக்கல்வி நிலையத்திற்கு கிடைத்தது.

***தென்காசி மறைவட்ட விவிலியக் கலைவிழா போட்டிகளில் வெற்றி பெற்ற மறைக்கல்வி நிலையங்களின் தரவரிசை பட்டியல்.***

| Parish | Points | Rank |
|---|---|---|
| St. Carmel Matha Sunday School, Amboor | 189 | 1 |
| St.Little Flower Sunday School, Puliyarai | 160 | 2 |
| St. Mary Sunday School, Vanji Nagar | 157 | 3 |
| Sahaya Matha Sunday School, Sundharapandiyapuram | 55 | 4 |
| St. Thomas Sunday School, Pudur | 23 | 5 |

***அருட்தந்தை ஜேக்கப் ஐயம்மாத்ற***
***இணை இயக்குனர்***

***அருட்தந்தை அபிலாஷ் சேவியர்***
***இயக்குனர்***

HOLY CHILDHOOD
குழந்தை ஈசோ



## குழந்தை ஈசோ இயக்கம்

**"கடவுள் நமக்கு அடைக்கலமும் ஆற்றலுமாய் உள்ளார்."**

**திருப்பாடல்கள் 46:1**

2025 நவம்பர் 23 ஞாயிற்றுகிழமை கிறிஸ்து அரசர் திருவிழாவை முன்னிட்டு நமது குழந்தை ஈசோ இயக்க குழந்தைகளில், ஒரு குழந்தை கிறிஸ்து அரசர் வேடமணிந்தும் மற்ற குழந்தைகள் புனிதர்கள் மற்றும் வானதூதர்கள் வேடமணிந்தும் திருப்பலியில் பங்கெடுத்தனர். விவிலிய வாசகம் மற்றும் காணிக்கை பவனியிலும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இறுதியில் குழந்தை ஈசோ இயக்கத்தின் தலைமையில் மறைகல்வி மாணவர்கள் இணைந்து பவனி நடத்தினர். ஆனிமேட்டர்ஸ் மற்றும் பொறுப்பாளர்கள் கூடுகையானது இணையதளம் வழியாக நடைபெற்று வருகிறது.

**இயக்குனர்**

**அருட்தந்தை டோஜி கொழுவகண்டதில்**

சிறுமலர்
MISSION LEAGUE

# மிஷன் லீக் இயக்கம்

மறைமாவட்ட அளவில் மிஷன் லீக் பேரணி நவம்பர் 16ம் தேதி அன்று கருங்கல் கருமாவிளை ஆலயத்தில் வைத்து ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்களின் தலைமையில் குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்களும் மிஷன் லீக் இயக்கத்தின் மறைமாவட்ட இயக்குனர் தந்தை பிறின்டோ அவர்களும் துணை இயக்குநர் தந்தை ஷிஜோ அவர்களும் ஆவணகாப்பாளர் பேரருட்தந்தை ஜோஷி குளத்திங்கல் அவர்களும் பொருளாளர் பேரருட்தந்தை சுபின் அவர்களும் கலந்து கொண்டனர். சி.எஸ்.ஐ. போதகர்களும் கலந்து கொண்டனர். பின்மறைமாவட்ட பொறுப்பாளரான திரு. ஞானதாஸ் அவர்கள் அனைவரையும் வரவேற்று பேசினார். பின் குருகுல முதல்வர் அவர்களால் மிஷன் லீக் கொடி அசைத்து பேரணியை துவங்கி வைத்தார். 7 மறைவட்டங்களில்இருந்து அருட்தந்தையர்களும் அருட்சகோதரிகளும் ஆசிரியர்களும் மாணவசெல்வங்களும் கலந்து கொண்டது மிகுந்த மகிழ்ச்சிக்குரியது. தென்காசி மிஷனிலிருந்து அருட்தந்தை சுமேஷ் வள்ளியாம்தடத்தில் அவர்களும் அருட்சகோதரிகளும் ஆசிரியர்களும் 30 மாணவர்களும் பேரணியில் கலந்து கொண்டனர். எதிர்நோக்கின் திருப்பயணிகள் என்ற ஜூபிலி ஆண்டின் மையக்கருத்தை மையமாக வைத்து மறைவட்ட பொறுப்பாளர்களின் தலைமையில் ஒவ்வொரு பங்கும் தங்களுக்கு கொடுத்த பொறுப்புக்களை மிகவும் நல்ல முறையில் பங்கு எடுத்தது பாராட்டத்தக்கது. பேரணியானது 3.30 மணி அளவில் சூசைபுரம் சூசையப்பர் ஆலயத்தில் வந்து சேர்ந்தது. பின் ஆயர் அவர்கள் தலைமையில் மறைமாவட்ட மிஷன் லீக் தலைவர் திரு அஜு அவர்கள் மிஷன் லீக் கொடி ஏற்றினார். பின் மிஷன் லீக் மறைமாவட்ட பொறுபாபாளர்களால் ஆயர் அவர்கள் பேரணி குறித்து பேசினார். பேரணி மிகவும் நன்றாக இருந்தது என்றும் அனைத்து மாணவர்களும் வருங்கால மிஷனரிமார்கள் என்றும் கூறினார். கொடுத்தகடமைகளை அனைவரும் நன்கு செய்தீர்கள் மாணவச் செல்வங்களான அனைவரும் மிஷன் லீக்கின் முத்திரையான அன்பு, சேவை, தியாகம், பொறுமை இவற்றை கடைபிடித்து வாழமுன் வரவேண்டும் என்றும் இந்த ஜூபிலி ஆண்டில் கத்தோலிக்க மக்களாகிய நாம் கிறிஸ்துவை உலகிற்கு எடுத்துக் காட்ட முன் வந்ததற்காக வாழ்த்துக்கள் கூறினார். இயக்குநர் தந்தை, துணை இயக்குநர் தந்தை, மறைமாவட்ட பொறுப்பாளர் ஆகியோருக்கு ஆயர் வாழ்த்துக்கள் கூறினார். திரு அஜு அவர்களும் உரையாற்றினார்.

## பேரணியில் பரிசு பெற்றவர்கள் விவரம்

| | | |
|---|---|---|
| முதல் பரிசு | - | நித்திரவிளை மறைவட்டம் |
| இரண்டாம் பரிசு | - | களியல் மறைவட்டம் |
| மூன்றாம் பரிசு | - | படந்தாலுமூடு மறைவட்டம் |

FLOAT

| | | |
|---|---|---|
| முதல் பரிசு | - | நித்திரவிளை மறைவட்டம் |
| இரண்டாம் பரிசு | - | மஞ்சாலுமூடு மறைவட்டம் |
| மூன்றாம் பரிசு | - | தக்கலை பிலாங்காலை மறைவட்டம் |

***தென்காசி திருதொண்டுத் தளத்திற்கு பங்கேற்பாளர் பரிசும் ஆயரால் வழங்கப்பட்டது.***

**இயக்குனர்**
**அருட்தந்தை பிரின்டோ குரியாஸ்**

---

YOUTH APOSTOLATE இளையோர் பணி

**சீரோ மலபார் இளையோர் இயக்கம் SMYM**

---

**SMYM மத்திய நிர்வாகக் கூட்டங்கள்:**

2025 நவம்பர் இரண்டாம் தேதி SMYM அலுவலகத்தில் வைத்து மதியம் 2 மணி அளவில் நடுவன் செயற்குழு உறுப்பினர்களுக்கான முதல் கூட்டமானது இயக்குனர் தந்தை தலைமையில் ஆரம்பமானது. தந்தை அவர்கள் கூட்டத்திற்கு வருகை புரிந்த புதிய உறுப்பினர்களை வரவேற்று பேசினார் அத்தோடு இதற்கு முன்னால் ஊக்குவிப்பாளராக அருட்சகோதரி எலேசா அவர்களுக்கு நன்றி கூறினார். தொடர்ந்து புதிய ஊக்குவிப்பாளராக அருட் சகோதரி ஜீனா அவர்களை தேர்ந்தெடுத்தார். ஒரு கூட்டத்தில் இளையோர்களால் நடத்தப்படும் கிறிஸ்துமஸ் விழா, ஆண்டு விழா மற்றும் ஜூபிலி நிறைவு விழா கொண்டாட்டங்கள் டிசம்பர் 14 புனித குழந்தை தெரசாள் ஆலயத்தில் வைத்து மதியம் 1:30 மணி அளவில் பெயர் பதிவுடன் நடத்தப்படும் என்று முடிவு எடுக்கப்பட்டது. அன்றைய தினம் நடத்தப்படும் போட்டிகள் நட்சத்திரம் உருவாக்குதல், கிறிஸ்து பிறப்பு பாடல் போட்டி மற்றும் ஒரு நிமிட ஷார்ட் பிலிம் என முடிவு எடுக்கப்பட்டது. இப்போட்டி களுக்கான முன்பதிவு தேதியாக டிசம்பர் 4 என முடிவு எடுக்கப்பட்டது. தொடர்ந்து நடுவன் செயற்குழு உறுப்பினர்களுக்கு ஒவ்வொரு பொறுப்புகளையும் பிரித்து கொடுக்கப்பட்டது. பின்னர் இறுதி ஆசீருடன் இக்கூட்டமானது நிறைவுற்றது. 2025 நவம்பர்



ஒன்பதாம் தேதி மாலை 7 மணி அளவில் நடுவன் செயற்குழு உறுப்பினர்களால் GMeet போடப்பட்டது. இக்கூட்டத்தில் நடுவன் செயற்குழு தலைவர் செல்வன் அஜித் அவர்களால் முன்னெடுக்கப்பட்டது. தலைவர் அவர்கள் நடைபெற இருக்கின்ற கிறிஸ்துமஸ் போட்டியின் விதிமுறைகளை மற்ற உறுப்பினர்களுக்கு விளக்கி கூறினார். பின்னர் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்புகளை எவ்வாறு முன்னெடுக்கலாம் என்றும் கலந்துரையாடப்பட்டது.

**ஜினோ**

**செயலர்**




**ஈசோ மெசிகாவிற்கு புகழ்!**

மாதர் ஜோதிஸ் இயக்க பொறுப்பாளர்களின் கூடுகையானது 1/11/2025 அன்று காலை சுமார் 10:30 மணிக்கு கல்லுவிளை இல் வாழ்வு இயக்க அரங்கில் வைத்து நடைபெற்றது. இக்கூடுகையில் குருகுல முதல்வர் அருட்தந்தை. ஜோஸ் முட்டத்துப்பாடம், அருட்தந்தை.லிஜோ, மாதர் ஜோதிஸ் இயக்கத்தின் இயக்குனர் அருட்தந்தை. ஜிம்மி தெக்கே கடுமத்தில், மாதர் ஜோதிஸ் இயக்கத்தின் அனிமேட்டர் அருட்சகோதரி. ரோஸ் மற்றும் அனைத்து மறை மாவட்ட மற்றும் மறைவட்ட பொறுப்பாளர்கள் கலந்து கொண்டார்கள். அருட்தந்தை.லிஜோ அவர்கள் செல்போன் பயன்படுத்துவதின் நன்மை,தீமைகள் பற்றி விளக்கம் அளித்தார்கள். மதியம் ஒரு மணி அளவில் கூடுகையானது முடிவடைந்தது.

## மாதர் ஜோதிஸ் இயக்க மறை மாவட்ட பொறுப்பாளர்களின் கூடுகை:

மாதர் ஜோதிஸ் இயக்க பொறுப்பாளர்களின் கூடுகை 26/11/2025 அன்று நடைபெற்றது. இதில் தக்கலை மறை மாவட்டத்தின் மாதர் ஜோதிஸ் இயக்கத்தின் இயக்குனர் தந்தை, அனிமேட்டர் அருட்சகோதரி மற்றும் அனைத்து பொறுப்பாளர்களும் கலந்து கொண்டு வரவிருக்கின்ற கிறிஸ்துமஸ் விழா பற்றி ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது.



அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில்
இயக்குநர்

---

# உறவிய மலர்

---

## சூசைபுரம் மறைவட்டம்

18/11/2025 அன்று பாலப்பள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திருவிழா திருப்பலி முடிந்தவுடன் அனைத்து உறவியங்களின் ஆண்டு விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. மறைமாவட்ட உறவிய இயக்குனர் அருட்தந்தை மிஜோ செபாஸ்டின் அவர்கள் தலைமை தாங்கினார். உறவியங்களின் கலைநிகழ்ச்சிகள் மிக சிறப்பான முறையில் நடைபெற்றது. பங்குத்தந்தை அஜின் ஜோஸ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். இறுதியில் அனைவருக்கும் உணவு வழங்கப்பட்டது. திருவிழாவின் 10 நாட்களும் சிறப்பு விருந்தினர்களுக்கு உறவிய இறை மக்கள் உணவு வழங்கினர்.

## சூசைபுரம் மறைவட்டம்

கிறிஸ்துராஜபுரம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் 20/11/25 அன்று திருவிழா திருப்பலி முடிந்தவுடன் அனைத்து உறவியங்களின் ஆண்டு விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. அருட்தந்தை ஜோமி கமுகும்மற்றத்தில்

(கழுவன்திட்டை, பங்குத்தந்தை) அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அனைத்து உறவியங்களின் கலைநிகழ்ச்சிகள் மிக சிறப்பான முறையில் நடைபெற்றன. பங்குத்தந்தை. ஜோஸ் வயலில் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். திருவிழாவின் 4 நாட்கள் சிறப்பு விருந்தினர்களுக்கு உறவிய இறை மக்களால் உணவு வழங்கப்பட்டது.

**தக்கலை - பிலாங்காலை மறைவட்டம்**

பரைக்கோடு கிறிஸ்து அரசர் ஆலயத்தில் 22/11/25, வெள்ளிக்கிழமை அன்று திருவிழா திருப்பலி முடிந்தவுடன் அனைத்து உறவியங்களின் ஆண்டு விழா பொதுக்கூட்டம் மறைமாவட்ட உறவிய இயக்குனர் அருட்தந்தை. மிஜோ செபாஸ்டின் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அனைத்து உறவியங்களின் கலைநிகழ்ச்சிகள் மிக சிறப்பான முறையில் நடைபெற்றன. பங்குத்தந்தை. செபி மேத்யு அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். திருவிழா நாட்களில் உறவிய இறைமக்கள் காணிக்கைப் பவனியை தலைமையேற்று நடத்தினார்கள். சிறப்பு விருந்தினர்களுக்கு இரவு உணவு உறவிய இறைமக்களால் வழங்கப்பட்டது.

அருட்தந்தை மிஜோ
இயக்குநர்

---

# கன்னியாகுமரி
## சமூக சேவை சங்கம்

---

### ஆரோக்கியமான சமூகம்
### மகிழ்ச்சியான குடும்பங்கள்
### [மருத்துவ முகாம் பளுகல்]

2025 நவம்பர் 22ஆம் தேதி கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் (KKSSS) சார்பில் பளுகல் சுய உதவி குழு (SHG) உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்காக மருத்துவ முகாம் புனித தோமஸ் சமூக நலக்கூடத்தில் வைத்து நடைபெற்றது. இந்த முகாமின் முக்கிய நோக்கம் மக்கள் சமூகத்தில் ஆரோக்கியத்தின் அவசியத்தையும், நோய்களை முதலிலேயே கண்டறிதலின் முக்கியத்துவத்தையும் உணர்த்துவதாகும். (SHG) ஒருங்கிணைப்பாளர் மற்றும் அனிமேட்டர் இந்த முகாமினை ஏற்பாடு செய்தனர். மருத்துவ சேவைகள் வழங்க St. Xavier's Catholic Multi Speciality Hospital (Chunkankadai) மற்றும் The Eye Foundation – Eye Care Specialist Hospital (Tirunelveli)

ஆகிய இரு மருத்துவ குழுக்கள் கலந்துகொண்டன. முகாமானது காலை 10 மணியளவில் இறைவணக்கத்துடன் ஆரம்பமானது. KKSSS இயக்குனர் அருட்தந்தை. மகேஷ் ஆன்டணி, சுய உதவி குழுக்களின் ஒருங்கிணைப்பாளர் திரு. அஜின் மற்றும் SH இல்லத்தின் மேலாளர் அருட்சகோதரி மற்றும் சிறப்பு மருத்துவர்களின் வருகை நிகழ்ச்சிக்கு தனி சிறப்பை அளித்தது. சுய உதவி குழு (SHG) உறுப்பினர்கள் அனைருக்கும் வரவேற்புரை வழங்கினர்.



இதனைத் தொடர்ந்து KKSSS இயக்குனர் அருட்தந்தை மகேஷ் ஆண்டனி அவர்கள் முகாமிற்கு தலைமை தாங்கி ஆரோக்கியமான வாழ்க்கைக்கு மருத்துவ பரிசோதனைகள் அவசியம் என்பதை வலியுறுத்தினார். உறுப்பினர்கள் உற்சாகமாக பங்கேற்று, மருத்துவ ஆலோசனை, சிகிட்சை வழிகாட்டல் மற்றும் ஆரோக்கியமான வாழ்வுக்கான விழிப்புணர்வு பெற்றனர். மேலும் பங்கேற்பாளர்கள் இந்த முன்னெடுப்புக்கு நன்றி தெரிவித்ததுடன், ஆரோக்கியமான மனப்போக்கை வளர்த்துக் கொள்ளும் பொறுப்புணர்வையும் பெற்றனர்.

## திறன் மேம்பாடு: சுய உதவி குழு உறுப்பினர்களுக்கான ஆரி பயிற்சி

பெண்கள் திறன் மேம்பாடுக்கான தொடர்ந்து நடைபெறும் முயற்சிகளின் ஒரு பகுதியாக, KKSSS நிறுவனம் மாறப்பாடி மையத்தில் சுய உதவி குழு (SHG) உறுப்பினர்களுக்காக ஆரி எம்பிராய்டரி பயிற்சியை அறிமுகப்படுத்தியது. மொத்தம் 19 பெண்கள் இந்த தையல் மற்றும் ஃபேஷன் துறையில் அதிகமாக தேவைப்படும் திறனை கற்க ஆர்வத்துடன் சேர்ந்து கொண்டனர். பயிற்சி நவம்பர் 3ஆம் தேதி, மாறப்பாடி செயின்ட் தோமஸ் அரங்கத்தில் தொடங்கியது. காலை 10.00 மணிக்கு நடைபெற்ற தொடக்க விழா இறைவணக்க நிகழ்வுடன் தொடங்கியது. KKSSS இயக்குநர், அருட்தந்தை மகேஷ் ஆன்டனி அவர்கள் தொடக்க உரையை



வழங்கி, இந்த வாய்ப்பை தன்னம்பிக்கை மற்றும் வாழ்வாதார திறன்களை மேம்படுத்த பயன்படுத்துமாறு ஊக்குவித்தார். அதனைத் தொடர்ந்து நடைமுறை ஆரி பயிற்சி தொடங்கப்பட்டது. இதில் உறுப்பினர்கள் நவீன தைக்கும் முறைகள் மற்றும் அலங்கார வடிவங்களை ஆர்வத்துடன் பயிற்சி செய்து கற்றுக் கொண்டனர். இந்த முயற்சி பெண்களை திறமை, தன்னம்பிக்கை மற்றும் வருமானம் உருவாக்கும் வாய்ப்புகளால் வலுவூட்டும் ஒரு முக்கிய படியாக திகழ்கிறது. SHG ஒருங்கிணைப்பாளர், மைய அனிமேட்டர் மற்றும் பயிற்சியாளர் கலந்து கொண்டனர்.

## திறன் மற்றும் சாதனையின் கொண்டாட்டம்: அன்னிக்கரை மையத்தில் ஆரி வேலை பயிற்சி நிறைவு

அன்னிக்கரை மையத்தில் SHG உறுப்பினர்களுக்கான ஆரி எம்பிராய்டரி பயிற்சி 40 நாட்கள் பயிற்சிக்குப் பின்னர் வெற்றிகரமாக நிறைவு பெற்றது. மொத்தம் 14 பெண்கள் இதில் கலந்து கொண்டு, வருமானம் உருவாக்கும் திறனாக வளர்ந்து வரும் ஆரி எம்பிராய்டரியில் தன்னம்பிக்கையும் கைத்திறனும்



பெற்றனர். அக்டோபர் 28ஆம் தேதி நடைபெற்ற நிறைவு விழாவில் KKSSS திட்ட அலுவலர், SHG உறுப்பினர்கள் மற்றும் பயிற்சியாளர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி இறைவணக்க பாடலுடன் தொடங்கியது. திட்ட அலுவலர் அவர்கள் பயிற்சி பெற்ற மாணவர்களை வாழ்த்தினார் தொடர்ந்து இந்த பயிற்சியை முழுவதும் பயன்படுத்துமாறு கூறினார். இதில் பயிற்சி பெற்ற மாணவர்கள் தாங்கள் பயன்படுத்திய ஆரி கலையை காட்சிப்படுத்தினர். வாழ்வாதார பயிற்சியில் படைப்பாற்றலுள்ள முன்னேற்றத்திற்கு தயாரித்த அழகிய வடிவங்களை அனைவரும் இந்த திறன் அடிப்படையிலான பயிற்சியை எளிய செலவில் வழங்கிய KKSSS நிறுவனத்துக்கு நன்றியைத் தெரிவித்தனர். இந்த முயற்சி பெண்களை தன்னிறைவு மற்றும் நிதியாதார நிலைத்தன்மை நோக்கி ஒரு படி முன்னேற்றியுள்ளது.

## வர்ணம் 2025 – குழந்தைகளின் திறமைகளைக் கொண்டாடும் வண்ண விழா

குழந்தைகள் தினம், குழந்தைகள் கொண்டொடும் தினம், நாம்

குழந்தைகளாக மாறும் தினம், இந்த அழகிய தினத்தை கொண்டொடும் வகையில் கன்னியாகுமரி சமூக சேவை சங்கமானது குழந்தைகளுக்காக "வர்ணம் 2025" போட்டிகளை சிறப்பாக திட்டமிட்டு நடத்தியது. இந்த போட்டிகளானது நவம்பர் மாதம் 15 ஆம் நாள் கல்லுவிளை ஆசீர் அரங்கத்தில் வைத்து நடைபெற்றது சுமார் 150 மேற்பட்ட குழந்தைகள் பங்கேற்றனர். இந்த போட்டிகளானது காலை 10 மணி அளவில் குருகுலமுதல்வர் பேரருள்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் தலைமையில் ஆரம்பமானது. இதனை தொடர்ந்து குழந்தைகளுக்கு மாறுவேடம், வண்ணம்தீட்டுதல் மற்றும் ஓவியப்போட்டிகள் மூன்று பிரிவுகளில் நடத்தப்பட்டது. இதற்கிடையில் குழந்தைகளை உற்சாகமூட்ட சிற்றுண்டி வழங்கப்பட்டது. நடுவர்கள் குழந்தைகளின் திறமைகளை சிறப்பாக மதிப்பீடு செய்தனர். இறுதியில் நடைபெற்ற பரிசுவழங்கள் நிகழ்வில் குழந்தைகள் நலத்துறை பிரிவிலிருந்து திருமதி. சகிலா பானு அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். இவர் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு குறித்து சிறப்புரையாற்றினார். மேலும் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசினையும் வழங்கி சிறப்பித்தார். இதனைத்தொடர்ந்து போட்டிகளில் கலந்துகொண்ட அனைத்து மாணவர்களுக்கும் கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் இயக்குனர் அருட்தந்தை மகேஷ் ஆண்டனி அவர்கள் சிறப்பு பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். இந்த நிகழ்வானது குழந்தைகளின் திறமைகளை கொண்டாடிய சிறப்பான குழந்தைகள் தின கொண்டாட்டமாக மாறியது.



## CTWWC திட்டக் குழுவின் பயிற்சி

புதுமை மற்றும் முன்னேற்றத்தை நோக்கமாக கொண்டு changing the way we care (CTWWC) FY26 திட்டமிடல் பயிற்சியானது, நவம்பர் 4 முதல் 6 வரை கோவளம் Kristhu Jayanthi Jubilee Animation Centre-ல் திட்டப் பணியாளர்கள் அனைவருக்கும் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் CRS-ன் திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் திட்ட அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டு திட்டத்தின் நோக்கம், செயல்பாடுகள் குறித்து விளக்கி

கூறினார். மேலும் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நான்கு கத்தோலிக்க மறைமாவட்டங்களை சேர்ந்த திட்டக் குழு உறுப்பினர்கள் ஒன்றுகூடி, திட்டத்தின் அடுத்த கட்ட செயல்பாடுகளுக்கான தெளிவான திட்டங்களை வகுத்தனர். இந்த பயிற்சி வகுப்பானது பணியாளர்கள் தங்களை மீளாய்வு செய்து புதிய பாதையை நோக்கி பயனளிக்க வழிவகுத்தது.

**அருட்தந்தை மகேஷ்**
**செயலர்**




# வின்சென்ட்-தே-பவுல் சபை

## பிலாங்காலை வட்டார சபை ஆண்டு விழா

தக்கலை மத்திய பேரவைக்கு உட்பட்ட பிலாங்காலை வட்டார சபையின் ஆண்டு விழா *09.11.2025* அன்று மதியம் 2.30 மணிக்கு பிலாங்காலையில் நடைபெற்றது. ஆன்மீக ஆலோசகர் பேரருள்தந்தை ஜோஷி தேவலகர தலைமையேற்று நலத்திட்ட உதவிகள் வழங்கி தலைமை உரையாற்றினார். சிறப்பு விருந்தினராக மத்திய பேரவை தலைவர் சகோதரர் றாபி வருகை தந்து வட்டார சபையின் செயல்பாடுகள் மற்றும் மத்திய சபையின் திட்டங்கள் குறித்து உரையாற்றினார். மத்திய பேரவை திட்ட அலுவலர் சகோதரர் எட்வின்சன் பங்கேற்றார். சகோதரி ஷைலா வரவேற்புரை வழங்க, செயலர் சகோதரி அனிதா ஆண்டறிக்கை அவையில் சமர்ப்பித்தார். வட்டார சபை தலைவர் சகோதரர் கிறிஸ்துதாஸ் ஓராண்டு செயல்பாடுகள் குறித்து அறிவித்ததோடு அனைவருக்கும் நன்றி கூற ஆண்டு விழாவானது சிறப்புடன் நிறைவு பெற்றது. வட்டார சபை முன்னாள் தலைவர் சகோதரர் சக்கரியா பொருளர் சகோதரி மெரின் தேவிகா முன்னாள் பொருளாளர் சகோதரி லீலா சேவியர் ஆகியோர் பங்கேற்று விழாவிற்கு மெருகூட்டினார். இடையிடையே கலை நிகழ்ச்சிகளும் கைசாலவிளை மற்றும் பிலாங்காலை பகுதியை சார்ந்த பயனாளிகட்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியதோடு இறுதியில் சிற்றுண்டியும் வழங்கப்பட்டது.

## ஆறுகாணி வட்டார சபை ஆண்டு விழா

ஆறுகாணி வட்டார சபையின் 27 ஆவது ஆண்டு விழா நெட்டா பங்கில் அருட்தந்தை ஜூப்லின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற திருப்பலியோடு *07.11.2025* அன்று நடைபெற்றது. தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு வட்டார சபையின் ஆன்மீக ஆலோசகர் பேரருள்தந்தை ஜோசப் வெட்டுக்காலல் தலைமை ஏற்று உரையாற்றினார். வட்டார சபை தலைவர் சகோதரர் சேவியர்



அனைவரையும் வரவேற்றார். நெட்டா பங்குத்தந்தை அருள் தந்தை ஜோசப் ஆனித்தோட்டம் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராக மத்திய சபை செயலர் சகோதரர் சோனிக் ரீகன் பங்கேற்று உரையாற்றினார். வட்டார சபை மேனாள் தலைவர் சகோதரர் ஏபி தாமஸ் பங்கேற்றார். சகோதரர் பிரினில் தாமஸ் அவர்களின் நன்றி உரையோடும் அன்பின் விருந்தோடும் கூடுகை இனிதே நிறைவு பெற்றது.

**இவண்,**

**D.P. ஷாஜி, தகவல் தொடர்பாளர்**

## மறைமாவட்டச் செய்திகள்

### மறைமாவட்ட தினத்திற்கான ஆராதனை

நமது மறைமாவட்டத்தின் 29வது மறைமாவட்ட தினத்திற்குத் தயாராகும் விதமாக, 2025 ஆம் ஆண்டு நவம்பர் 07 ஆம் தேதி வெள்ளிக்கிழமை மறைமாவட்டத்தின் அனைத்துப் பங்குத்தலங்கள் மற்றும் கன்னியர் மடங்களில் ஒரு சிறப்பு நற்கருணை ஆராதனை ஏற்பாடு செய்யப்பட்டது. கடந்த ஓராண்டு முழுவதும் நமது மறைமாவட்டத்தின் மீது பொழிந்த ஏராளமான ஆசீர்வாதங்களுக்காக ஆண்டவருக்கு நமது நன்றியைத் தெரிவிக்கும் விதமாக இந்த ஆன்மீக முயற்சி மேற்கொள்ளப்பட்டது. மறைமாவட்டம் முழுவதும் உள்ள விசுவாசிகள், நமது விசுவாசப் பயணத்தில் முன்னேறிச் செல்லும்போது, கடவுளின் தொடர்ச்சியான அருளையும், பாதுகாப்பையும், வழிகாட்டுதலையும் வேண்டி, தூய நற்கருணை முன்பாக ஜெபத்தில் ஒன்றிணைந்தனர். இந்த ஆராதனை ஒவ்வொரு பங்குத்தலத்திலும் மற்றும் துறவற இல்லத்திலும் சிறப்பாகத் திட்டமிடப்பட்டு, பக்திபூர்வமாக நடத்தப்பட்டது. குருக்கள்,

அருட்சகோதரிகள் மற்றும் பொதுநிலையினர், நன்றி, விசுவாசப் புதுப்பித்தல் மற்றும் திருச்சபையின் பணிக்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றை மையமாகக் கொண்ட ஜெபங்கள், பாடல்கள் மற்றும் தியானங்களுக்குத் தலைமை தாங்கி, ஒரு அர்த்தமுள்ள பங்கேற்பை உறுதி செய்தனர்.

## அருட்தந்தை ஜேக்கப் வெள்ளரிங்காட்டிற்கு (95) இறுதி அஞ்சலி

பாலா மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை ஜேக்கப் வெள்ளரிங்காட் 2025 நவம்பர் 04 அன்று இறையடி சேர்ந்தார். அருட்தந்தை ஜேக்கப் வெள்ளரிங்காட் அவர்கள் 2005 முதல் 2014 வரை நமது மறைமாவட்டத்தில் பின்வரும் பதவிகளில் பணியாற்றினார்: புனித மேரி இளங்குருமட பேராசிரியர் (2005 - 2009) மற்றும் சங்கமத்தில் தங்கியிருந்த நீதித்துறை விகார் (2009 - 2014). அருட்தந்தை வெள்ளரிங்காட்டின் பூதவுடல், பொதுமக்கள் இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக, 2025 நவம்பர் 06 அன்று மாலை 05.00 மணி முதல் கடனாட்டில் உள்ள அவரது உறவினர் ஒருவரின் வீட்டில் வைக்கப்பட்டிருந்தது. இறுதிச் சடங்குகளின் முதல் பகுதி 2025 நவம்பர் 07, வெள்ளிக்கிழமை அன்று காலை 09.00 மணிக்கு கடனாட்டில் உள்ள உறவினர் வீட்டில் நடைபெற்றது. கர்தினால் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி மற்றும் ஆயர் ஜார்ஜ் ராஜேந்திரன் SDB ஆகியோர் பங்கேற்றனர். இரண்டாம் பகுதி காலை 10.00 மணிக்கு பாலாய், லாலம் (புத்தன்பள்ளி) புனித ஜார்ஜ் தேவாலயத்தில் நடைபெற்றது, அதைத் தொடர்ந்து இறுதித் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. சில குருக்களும் இளங்குருமட பிரதிநிதிகளும் அவருக்கு விடை கொடுக்க வந்திருந்தனர். மறைமாவட்டத்தில் அவர் ஆற்றிய சேவைக்காக கடவுளுக்கு நன்றி கூறுவோம்.

## பெரும்சிலம்பில் துறவற உடை அணிதல் மற்றும் முதல் வாக்குறுதி அளித்தல்

08 நவம்பர் 2025 அன்று, பிராவிடன்ஸ் இல்லத்தில், குன்னம்தானத்தைச் சேர்ந்த திவ்ய பராமரிப்பின் சிறிய ஊழியர்கள் (LSDP) சபையைச் சேர்ந்த பயிற்சி கன்னியான சகோதரி மேரி டெஸ்ஸா, மகிழ்ச்சியுடன் தனது துறவற உடையைப் பெற்றுக்கொண்டு தனது முதல் வாக்குறுதியை அளித்தார். ஆயர் தலைமையில் திருப்பலி ஆராதனை காலை 10:00 மணிக்குத் தொடங்கியது. பெரும்சிலம்பு புனித தோமையார் மிஷன் பங்குத்தந்தையான அருட்பணி ஜோஷி குலத்தும்கல் வரவேற்புரை ஆற்றினார். அருட்பணி ஜோஸ் முத்தத்துபடம் மற்றும்

அருட்பணி அஜீஷ் அட்டியில் ஆகியோர் இணைந்து திருப்பலியை நிறைவேற்றினர். திருப்பலிக்குப் பிறகு, ஒரு பாராட்டு விழா நடைபெற்றது. அதில், சி.ஆர்.ஐ-யின் பிரதிநிதியாக அருட்பணி மேத்யூ அரேக்கலம் சி.எம்.ஐ அவர்களும், அவரது சொந்தப் பங்கான கரோடு பங்கிலிருந்து பங்கு மக்களும் புதிதாக வாக்குறுதி அளித்த சகோதரியைப் பாராட்டினர். இறுதியில், சகோதரி மேரி டெஸ்ஸா அங்கு கூடியிருந்த அனைவருக்கும் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தார். இந்த ஆசீர்வதிக்கப்பட்ட தருணத்தில் சகோதரி மேரி டெஸ்ஸாவிற்கு மறைமாவட்டம் சார்பில் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம், மேலும் பங்குத்தந்தை அருட்பணி ஜோஷி குலத்தும்கல், பங்கு மக்கள் மற்றும் LSDP சகோதரிகள் ஆகியோருக்கு பாராட்டுக்கள்.

## 29வது மறைமாவட்ட தினக் கொண்டாட்டங்கள்

நவம்பர் 11 அன்று மறைமாவட்டம் நிறுவப்பட்ட தினத்தை நினைவுகூரும் வகையில், மறைமாவட்டம் தனது 29வது மறைமாவட்ட தினத்தை 2025 நவம்பர் 09, ஞாயிற்றுக்கிழமை அன்று கொண்டாடியது. இந்தக் கொண்டாட்டம் அனைத்து விசுவாசிகளின் பங்கேற்புடன் பங்குத்தள அளவில் நடைபெற்றது. மறைமாவட்ட தினத்திற்கான ஆயத்தமாக, 2025 நவம்பர் 07 அன்று அனைத்துப் பங்குத்தளங்களிலும் மற்றும் கன்னியர் மடங்களிலும் ஒரு மணி நேர ஆராதனை நடத்தப்பட்டது, இது விசுவாசிகளின் ஆன்மீகப் புதுப்பித்தலுக்குப் பெரிதும் பங்களித்தது. ஞாயிற்றுக்கிழமை ஒவ்வொரு பங்குத்தளத்திலும் திருப்பலியின் கம்பீரமான கொண்டாட்டத்துடன் மறைமாவட்ட தினம் அனுசரிக்கப்பட்டது. திருப்பலிக்கு முன், ஒரு சிறப்பு அறிமுகம் அந்த நாளின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தது, அதைத் தொடர்ந்து ஒரு குறியீட்டு காணிக்கைப் பவனி நடைபெற்றது. பிரதிநிதிகள் விளக்கேற்றினர், மேலும் 'கரோசூசா'வின் போது கூடுதல் மன்றாட்டுகள் வாசிக்கப்பட்டன. கடந்த ஓராண்டில் மறைமாவட்டத்தின் முக்கிய நிகழ்வுகளை எடுத்துரைக்கும் ஒரு சிறப்புச் சுற்றறிக்கை கடிதம் மறையுரைக்குப் பிறகு வாசிக்கப்பட்டது. திருப்பலியைத் தொடர்ந்து ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதில், அருட்பணி ஜோஷி குளத்தும்கல் அவர்களால் தயாரிக்கப்பட்ட மறைமாவட்ட ஆண்டு அறிக்கை, காணொளி/ஒலி வடிவத்தில் வாசிக்கப்பட்டது. இதற்குப் பொருத்தமாக, மாணவர்கள் "கிறிஸ்துவைக் கொண்டாடுவோம், மறைமாவட்டத்தின் வழியாக விசுவாசத்தைக் கொண்டாடுவோம்" என்ற

கருப்பொருளை மையமாகக் கொண்ட கலை நிகழ்ச்சிகளை வழங்கினர். நிகழ்வின் முடிவில், ஒவ்வொரு பங்குத்தளமும் தங்களின் வசதிக்கேற்ப உணவுகள் அல்லது சிற்றுண்டிகளை வழங்கின. ஆயர் அவர்கள் 2025 நவம்பர் 09 அன்று பத்துகாணி புனித தோமையார் ஆலயத்தில் மறைமாவட்ட தினத்தைக் கொண்டாடினர்.

## இராமேஸ்வரத்தில் புதிய எல்.எஸ்.டி.பி. கன்னியர் மடம் மற்றும் பிராவிடன்ஸ் இல்ல மந்திரிப்பு

நமது மறைமாவட்டத்தின் சிறந்த மறைப்பணியாளர்களில் ஒருவரான அருட்தந்தை மேத்யூ குழிஞ்சாலில், பலதரப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்காக ஒரு பிராவிடன்ஸ் இல்லத்தை நிறுவி, அந்த மறைப்பணித் தளத்தில் குடும்ப அப்போஸ்தலப் பணியை மேற்கொள்வதற்காக, இராமேஸ்வரம், வேதாளையில் உள்ள 1.25 ஏக்கர் நிலத்தை 2024 ஜூலை 27 அன்று எல்.எஸ்.டி.பி. சபைக்கு நன்கொடையாக வழங்கினார். புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் 2025 பிப்ரவரி 25 அன்று நாட்டப்பட்டது. அருட்தந்தை மேத்யூ குழிஞ்சாலில் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ், கட்டுமானப் பணிகள் விரைவில் நிறைவடைந்தன. புதிதாகக் கட்டப்பட்ட பிராவிடன்ஸ் இல்லம், நவம்பர் 22 அன்று மாலை 5:00 மணிக்கு, சிவகங்கை மறைமாவட்ட ஆயர் டாக்டர் லூர்து ஆனந்தம் அவர்களால், பல குருக்கள், கன்னியாஸ்திரிகள், கிராம மக்கள் முன்னிலையில் ஆயர் ஜார்ஜ் ராஜேந்திரன் அவர்களால் மந்திரிக்கப்பட்டது. இல்லம் மந்திரிப்புக்கு முன் மாலை 3:00 மணிக்கு தேவாலயம் அர்ச்சிக்கப்பட்டது. மறைமாவட்ட நிர்வாகக் குழுவின் பிரதிநிதிகள், விரிவுபடுத்தப்பட்ட மறைப்பணித் தளங்களின் மறைப்பணியாளர்கள் மற்றும் நமது மறைமாவட்டத்தைச் சேர்ந்த குருக்களும் கன்னியாஸ்திரிகளும் இந்த முழு நிகழ்விலும் கலந்துகொண்டனர். ஆசீர்வாதத்திற்குப் பிறகு, ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதில் அருட்தந்தை மேத்யூ குழிஞ்சாலில் கூடியிருந்த அனைவரையும் வரவேற்றார். தனது வாழ்த்துரையில், ஆயர் லூர்து ஆனந்தம் அவர்கள், இராமேஸ்வரத்தில் எல்.எஸ்.டி.பி கன்னியாஸ்திரிகளாலும் நமது மறைமாவட்டத்தாலும் மேற்கொள்ளப்படும் தொண்டுப் பணிகளுக்கு சிவகங்கை மறைமாவட்டத்தின் முழு ஆதரவையும் உறுதி அளித்தார். ஆயர் தமது தலைமை உரையில், பலதரப்பட்ட மாற்றுத்திறனாளிகளைப் பராமரிப்பதில் எல்.எஸ்.டி.பி. கன்னியாஸ்திரிகளின் தனித்துவமான பண்பை எடுத்துரைத்தார். வேதாளையின் அருகிலுள்ள கிராமங்களைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி குழந்தைகளும் மற்ற

குழந்தைகளும் நிகழ்த்திய கலை நிகழ்ச்சிகளால் பொதுக்கூட்டம் மேலும் சிறப்படைந்தது. கொண்டாட்டத்தின் முடிவில், அனைவருக்கும் விருந்து பரிமாறப்பட்டது. சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து சுமார் 250 பேர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர். இந்த இல்லத்தை நிறுவி ஆசீர்வதிப்பதற்கு எடுத்த முயற்சிகளுக்காக தலைமை மேயரான அருட்சகோதரி ஜின்சி எல்.எஸ்.டி.பி. அவர்களுக்கு மறைமாவட்டம் சார்பில் மனமார்ந்த நன்றி. இந்த நிகழ்வை ஒரு மாபெரும் வெற்றியாக மாற்றுவதில் தனது அசைக்க முடியாத ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கிய அருட்தந்தை மேத்யூ குழிஞ்ஞாலிலுக்கு நன்றி.

## அருட்சகோதரி பிரிட்ஜெட் பால் தெக்கேபரம்பில் எஸ்.டி.எஸ் (77)

மார்ச் 21 அருட்சகோதரி பிரிட்ஜெட் பால் தெக்கேபரம்பில் எஸ்.டி.எஸ் அவர்கள் காலமானார். பாலை முத்தோலாபுரம் புனித செபாஸ்டியன் ஆலயத்தைப் பூர்வீகமாகக் கொண்டவர். ஒரு அருட்சகோதரியாக, அவரது அர்ப்பணிப்புச் சேவை நமது மறைமாவட்டத்தில் 18 ஆண்டுகள் நீடித்தது. ஏழு ஆண்டுகள் கரோட்டில் (1980-1987) 11 ஆண்டுகள் மஞ்சாலுமூட்டில் (2003-2012; 2023-2025) அவர் சேவை செய்தார். இறுதிச் சடங்கு மார்ச் 24 காலை 10:00 மணிக்கு மஞ்சாலுமூடு SDS கான்வென்ட் ஆலயத்தில் நடைபெற்றது.

## அருட்தந்தை மேத்யூ செருதன்னிக்கல் (85) அவர்களுக்கு இறுதி அஞ்சலி

காஞ்சிரப்பள்ளி மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை மேத்யூ செருதன்னிக்கல் அவர்கள் 2025 நவம்பர் 22 அன்று இறையடி சேர்ந்தார். அருட்தந்தை அவர்கள் 1973 முதல் 1980 வரை நமது மறைமாவட்டத்தில் ஆறுகாணி திருக்குடும்ப மறைவட்ட ஆலயத்தின் பங்குத் தந்தையாகப் பணியாற்றினார். தற்போதைய ஆறுகாணி ஆலயம் அவரது காலத்தில் தான் கட்டப்பட்டது. இறுதிச் சடங்குத் திருப்பலி 2025 நவம்பர் 24, திங்கட்கிழமை அன்று மதியம் 1.30 மணிக்கு எரட்டயாரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து, மதியம் 2.00 மணிக்கு கட்டப்பனை புனித ஜார்ஜ் மறைவட்ட ஆலயத்தில் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன. ஆறுகாணி பங்கிலிருந்து பங்கு மக்கள் மற்றும் துறவறச் சகோதரிகள் குழுவினர் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டனர். நமது மறைமாவட்டத்தில் அவர் ஆற்றிய சேவைக்காக கடவுளுக்கு நன்றி கூறுவோம்.

## அருட்தந்தையர் பேரவைக் கூடுகை

2-வது குருக்கள் பேரவையின் நான்காவது பொதுக்குழுக் கூட்டம் 2025 நவம்பர் 24 அன்று காலை 10:15 மணிக்கு சங்கமத்தில் நடைபெற்றது. 17 உறுப்பினர்களில், 14 பேர் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

1. குருக்களின் தொடர் பயிற்சி.
2. மறைமாவட்டத்திற்கான ஒரு வளக் குழுவை உருவாக்குதல் மற்றும் வலுப்படுத்துதல்.
3. குருக்களுக்கான படிகள்.

பேரவையின் செயலாளரான அருட்பணி ஜோஷி குலத்தும்கல், நிகழ்ச்சி நிரலை முன்வைத்து, திறந்த மற்றும் அர்த்தமுள்ள கலந்துரையாடலில் ஈடுபடுமாறு உறுப்பினர்களை அழைத்தார். உறுப்பினர்கள் தீவிரமாகப் பங்கேற்று, மறைமாவட்டத்தின் நன்மைக்காகப் பல மதிப்புமிக்க மற்றும் ஆழமான பரிந்துரைகளைப் பகிர்ந்துகொண்டனர்.

## மலேசியாவின் பினாங்கில் நடைபெற்ற மாபெரும் நம்பிக்கை யாத்திரை மாநாடு

மாபெரும் நம்பிக்கைப் பயண மாநாடு 2025 நவம்பர் 27-30, தேதிகளில் மலேசியாவின் பினாங்கில் நடைபெற்றது. இது FABC அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்டு, பினாங்கு மறைமாவட்டத்தால் நடத்தப்பட்டது. மேலும், PMS ஆசியா மற்றும் மலேசியா, சிங்கப்பூர், புருனே ஆயர் பேரவைகளின் ஒத்துழைப்புடன் இது நடைபெற்றது. சீரோ மலபார் திருச்சபையில் 2025 ஆம் ஆண்டு கிறிஸ்து ஜூபிலி ஆண்டை ஏற்பாடு செய்வதற்கான ஆயர் மன்றக் குழு உறுப்பினர்களாக இருந்த பேரருட்திரு மார் ரஃபேல் தட்டில் மற்றும் பிற ஆயர்களுடன் இந்த மாநாட்டில் ஆயர் ஜார்ஜ் ராஜேந்திரன் SDB அவர்களும் பங்கேற்றார். இந்த மாநாட்டில் 10 கர்தினால்கள், 104 ஆயர்கள், 155 குருக்கள், 74 துறவறச் சகோதரிகள் மற்றும் 8 திருத்தொண்டர்கள் உட்பட இருநூறுக்கும் மேற்பட்ட திருச்சபை தலைவர்கள், அத்துடன் 32 நாடுகளில் இருந்து வந்த சுமார் 422 பொதுநிலைத் தலைவர்கள், 32 ஏற்பாட்டுக் குழு உறுப்பினர்கள் மற்றும் 90-க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் கலந்துகொண்டனர். 2025-ல் நம்பிக்கை ஜூபிலி ஆண்டை நிறைவு செய்யத் தயாரான திருச்சபைக்கு இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தருணமாகும். இந்த மாபெரும் நம்பிக்கை பயணம் மூன்று நாட்களுக்கு நீடித்தது. ஆசியா முழுவதும் திருச்சபையின் சேவையை வலுப்படுத்தும் நோக்கில் வேண்டுதல்கள், கலாச்சாரப் பரிமாற்றங்கள், அமர்வுகள் மற்றும் ஆயர்சார் கலந்துரையாடல்கள் இதில் இடம்பெற்றன.

# மறைவட்டச் செய்திகள்

## தூசைபுரம்

### ▶ புனித வியாகப்பர் ஆலயம், மாங்கரை



மறைமாவட்ட தினத்தையொட்டி 07 நவம்பர் 2025, நற்கருணை ஆராதனை ஆலயத்தில் நடத்தப்பட்டன. நவம்பர் 9 இல், மறைமாவட்ட தினவிழா பங்கில் கொண்டாடப்பட்டது முன்னுரை வாசித்து குத்துவிளக்கு ஏற்றி ஆடம்பர திருப்பலி நடைபெற்றன. அதை தொடர்ந்து பொதுக்கூட்டம் அதில் சொற்பொழிவு மறைமாவட்ட குழுப்பாடல் மறைமாவட்ட வரலாறு வாசிக்கப்பட்டது. இறுதியில் அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டன. அன்று இரண்டு பிள்ளைகளுக்கு பங்கு தந்தை தலைமையில் புது நன்மை வழங்கப்பட்டன. நவம்பர் 23 இல், மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான கூட்டம் பங்கு தந்தை தலைமையில் நடைபெற்றன. 1.45 மணிக்கு பங்கு தந்தை தலைமையில் பங்கு பேரவை நடைபெற்றன. குழந்தை ஈசோ இயக்கம் சார்பாக கிறிஸ்து அரசர் திருவிழா பங்கில் கொண்டாடப்பட்டது. அனைத்து குழந்தைகளும் புனிதர்கள் வேடமணிந்து திருப்பலி சிறப்பித்து பவனியில் பங்கெடுத்தனர்.

### ▶ கிறிஸ்து அரசர் ஆலயம், பாலப்பள்ளம்

2025 நவம்பர் 1 ஆம் தேதி பங்குப் பேரவை கூடுகை அருள்தந்தை அஜின் ஜோஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதில் வருடாந்திர நற்செய்தி பெருவிழா மற்றும் ஆலய திருவிழா குறித்து விவாதித்து

முடிவு செய்யப்பட்டது. நவம்பர் 7 8 9 ஆகிய தினங்களில் அருட்தந்தை ஆல்பர்ட் திருச்சி அவர்கள் தலைமையில் மாபெரும் நற்செய்தி பெருவிழா நடைபெற்றது. திரளாக மக்கள் இதில் பங்கேற்று பயன்பெற்றனர். நவம்பர் 14 தொடங்கி 23 வரை பங்கு குடும்ப விழா சிறப்பாக நடைபெற்றது. பங்குத்தந்தை



கொடியேற்றி விழாவினை தொடங்கி வைத்தார். மறைக்கல்வி ஆண்டு விழா, உறவியங்களின் ஆண்டு விழா, பக்த இயக்கங்களின் ஆண்டு விழா, ஆடம்பர தேர் பவனி, அன்பின் விருந்து என விமரிசையாக நடைபெற்ற திருவிழாவின் மூன்றாம் நாள் இராசை திருப்பலி நடைபெற்றது. நிறைவு நாளில் மேதகு ஆயர் ஜார்ஜ் இராஜேந்திரன் ஆண்டகை பங்கேற்று திருப்பலி நிறைவேற்றி முதல் திருவிருந்தும் வழங்கினார். ஒவ்வொரு நாளும் ஜெபமாலை நவநாள் திருப்பலி என நடைபெற்ற ஆன்மீக உணர்வூட்டும் நிகழ்வுகளுக்கு குருகுல முதல்வர் பேரருள் தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் உட்பட பல்வேறு அருள் தந்தையர்கள் பங்கேற்று சிறப்பித்தனர். நவம்பர் 28 தொடங்கி பங்கில் பஜனை (Carels) 9 நாட்கள் நடைபெறுகிறது.

### ▶ புனித தோமையார் ஆலயம், மாதாபுரம்

23 நவம்பர் 2025, மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான கூட்டம் நடைபெற்றது. கிறிஸ்துமஸ் Friend எடுக்கப்பட்டன. கிறிஸ்து அரசர் வேடமணிந்து குழந்தை ஈசோ இயக்க பிள்ளைகள் அன்றைய திருப்பலியை சிறப்பித்தனர்.

### ▶ புனித சூசையப்பர் மறைவட்ட ஆலயம், சூசைபுரம்

02/11/2025 ஞாயிற்றுக்கிழமை முதல், ஞாயிற்றுக்கிழமைகளில்

பெரியவர்களுக்கென காலை 6.45 மணிக்கும் மறைக்கல்வி மாணவர்களுக்கென காலை 9.00 மணிக்கும் என 2 திருப்பலி நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது. 07/11/2025, வெள்ளிக்கிழமை மறை மாவட்ட தினத்தை முன்னிட்டு மாலை 5:45 மணிக்கு திருப்பலியும் அதனைத் தொடர்ந்து சிறப்பு நற்கருணை ஆராதனையும் நடத்தப்பட்டது. 09/11/2025 ஞாயிற்றுக்கிழமை மறைமாவட்ட தினமாக கொண்டாடப்பட்டது. திருப்பலியில் மறை மாவட்ட அறிக்கையானது வாசிக்கப்பட்டது மறைக்கல்வி நிலையத்தை பார்வையிட ஊக்குவிப்பாளர் திரு. விஜயராஜன் அவர்கள் வருகைதந்தார்கள். மாலை 5.30 மணிக்கு பங்கின் 2025 - 2028 வருடத்திற்கான பங்குபேரவையின் முதல் கூட்டமானது நடைபெற்றது. மறைமாவட்டத்திலிருந்து ஆவண காப்பாளர் பேரருட்தந்தை ஜோஸி குளத்துங்கல் அவர்கள் வருகை தந்து இந்த கூட்டத்தை துவங்கி வைத்தோடு பங்கு பேரவை விதிமுறைகள் குறித்து விளக்கி பேசினார்கள். பங்குபேரவை உறுப்பினர்கள் உறுதி மொழி ஏற்று தங்கள் பதவியை ஏற்றெடுத்தார்கள். 14/11/2025, வெள்ளிக்கிழமை குழந்தைகள் தின விழாவை முன்னிட்டு காலையில் நடந்த திருப்பலியில் அனைத்து பிள்ளைகளுக்காகவும் சிறப்பு ஜெபம் சொல்லப்பட்டது. 15/11/2025, சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு மறைக்கல்வி ஆசிரியர்களுக்கான கூட்டம் நடைபெற்றது. மாலை 5.30 மணிக்கு மறை மாவட்ட மிஷன் லீக் பேரணிக்கான முன்னேற்பாடுகளை செய்யும் விதமாக எல்லா உறவியங்களிலிருந்தும் 5 நபர்கள் கொண்ட ஒரு குழுவினர் பங்குத்தந்தையின் தலைமையில் ஆலயத்தில் ஒன்றாக கூடி அடுத்த நாள் பேரணியை எவ்வாறு சிறப்பாக நடத்துவது என்பது குறித்து திட்டமிட்டனர். 16/11/2025, ஞாயிற்றுக்கிழமை- மிஷன் லீக் பேரணியானது கருமாவிளை சிஎஸ்ஐ சேகர சபை ஆலயத்தில் இருந்து தொடங்கி எமது ஆலயம் வரை நடைபெற்றது. 21/11/2025, வெள்ளிக்கிழமை ஏ.பி.ஜே.எம். பள்ளி ஆண்டுவிழா கலை நிகழ்வுகள் நடைபெற்றன. 23/11/2025, ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்து அரசர் பெருவிழா சிறப்பிக்கப்பட்டது. குழந்தை ஈசோ இயக்க குழந்தைகள் கிறிஸ்து



அரசர் போலவும் வானதூதர்கள் போலவும் வேடமணிந்து அணிவகுத்து வந்தனர். கிறிஸ்து அரசர் உறவிய இறைமக்கள் அனைவருக்கும் இனிப்பு வழங்கினர். 30/11/2025, ஞாயிற்றுக்கிழமை- பிற்பகல் 3 மணிக்கு நற்கருணை ஆராதனை சபையின் இணை நிறுவனர் அருட்சகோதரி சந்தாளம்மா அவர்களின் 110வது பிறந்தநாள் மற்றும் கிறிஸ்து யூபிலி ஆண்டு இவற்றை முன்னிட்டு நற்கருணை ஆராதனை துறவற சமூகம் மக்கள் குடும்பமாக கலந்து கொள்ள ஏற்பாடு செய்த வினாடி வினா போட்டி ஆலய வளாகத்தில் வைத்து நடைபெற்றது. மாலை 5.30 மணிக்கு பங்கு பேரவை கூட்டம் நடைபெற்றது.

### தூய தேவமாதா ஆலயம், கிள்ளியூர்



07 நவம்பர் 2025, மறைமாவட்ட தினத்தையொட்டி திருப்பலி அதை தொடர்ந்து அருட்தந்தை ஜெபனேஷ் தலைமையில் நற்கருணை ஆராதனை சிறப்பு மறையுரை வழங்கப்பட்டன.

### பாத்திமா அன்னை ஆலயம், பாத்திமாபுரம்

பாத்திமா அன்னை ஆலயத்தில் 9 நவம்பர் 2025 அன்று பங்குதந்தை அவர்களால் திருப்பலி நிறைவேற்றப்பட்டது



அன்றையதினம் மறைமாவட்ட தினம் கொண்டாடப்பட்டது, கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. நவம்பர் 17 அன்று அருட்சகோதரி எல்சிட் அவர்களின் பெயர் கொண்ட திருவிழா கேக் வெட்டிக் பரிசுகள் வழங்கி கொண்டாடப்பட்டது.

## தக்கலை – பிலாங்காலை

### புனித சவேரியார் ஆலயம், கைசாலவிளை

நவம்பர் 9ம் தேதி மறைமாவட்ட தினம் பங்களவில் கொண்டாடப்பட்டது. திருப்பலி காணிக்கை பவனி, பொதுக்கூட்டம் மற்றும் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. காலை உணவு வழங்கப்பட்டது. நவம்பர் 29 ம் தேதி

ஆலய திருவிழா பங்குதந்தை தலைமையில் கொடியேற்றத்துடன் தொடங்கியது.



### புனித சூசையப்பர் ஆலயம் தடிக்காரன்கோணம்

முதல் வெள்ளி மற்றும் மறைமாவட்ட தினத்திற்கான சிறப்பு ஆராதனை நடைபெற்றது. மறைமாவட்ட ஊக்குவிப்பாளர் எம் மறைக்கல்வி நிலையத்தை பார்வையிட்டார். 9 ம் தேதி மறைமாவட்ட தினம் கொண்டாடப்பட்டது. பாலிடேட்டிவ் கேர் சார்பில் புதிய வீடு சந்திக்கப்பட்டது.

### தூய மிக்கேல் அதிதூதர் ஆலயம், தெற்றிவிளை



தூய மிக்கேல் அதிதூதர் ஆலயம் தெற்றிவிளையில் புதிதாக கட்டப்பட்டுள்ள தேவாலயத்தில் முதல் ஆலய திருவிழா 14/11/2025 முதல் 24/11/2025 வரை நடைபெற்றது.

### புனித குழந்தை தெரசாள் மறைவட்ட ஆலயம் பிலாங்காலை

சகல புனிதர்கள் திருவிழா இரண்டாவது சனிக்கிழமை நோயாளிகளுக்கான திருப்பலி மற்றும் ஆராதனை தொடர்ந்து நேர்ச்சை உணவு வழங்கப்பட்டது. மரியாயின் சேனை வெள்ளிவிழா மாதாசொரூபம் புனித தோமையார் உறவியத்தில் வைத்து ஜெபிக்க ஆலயத்தில் இருந்து பங்குதந்தையால் அவ்வுறவிய மக்களிடம் வழங்கப்பட்டது. மறைமாவட்ட தின ஆராதனை நடைபெற்றது 9 ம் தேதி மறைமாவட்ட தினம் பங்களவில் திருப்பலி, காணிக்கை



பவனி பொதுக்கூட்டம் கலைநிகழ்ச்சிகள் மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது. புனித அந்தோணியார் உறவியம் சார்பாக பங்குதந்தை தலைமையில் முஞ்சிறை திருத்தலம் சென்று ஜெபமாலை, பாவசங்கீர்த்தனம் மற்றும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. மிஷன் லீக் பவனியில் பங்குதந்தை மற்றும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். மாதர் ஜோதிஸ் இயக்கத்தை தக்கலை பிலாங்காலை மறைவட்ட இயக்குநர் அருட்தந்தை பிரின்ஸ் மற்றும் மறைவட்ட தலைவர் திருமதி ஷைலா ஆகியோர் பார்வையிட்டனர். அனைத்து நிகழ்வுகளையும் பங்குதந்தை முன்னின்று ஒருங்கிணைத்து வழிநடத்தி வருகிறார்.

## மஞ்சாலுமூடு

### திரு குடும்ப ஆலயம், முக்கூட்டுக்கல்

முக்கூட்டுக்கல் திருக் குடும்ப தேவாலயத்தில் 30 நவம்பர் 2025 ஞாயிற்றுக்கிழமை கிறிஸ்து அரசர் தினத்தை குழந்தை ஈசோ இயக்க மாணவர்கள் திருப்பலியில் பல புனிதர்களின் வேடம் தரித்து பவனியாக வந்து காணிக்கை செலுத்தி திருப்பலியை சிறப்பித்தனர். அன்றையதினம் திருப்பலியில் மாதர் ஜோதிஸ் இயக்க தாய்மார்கள் பவனியாக வந்து காய்கறிகள் காணிக்கையாக வைத்து திருப்பலி சிறப்பித்தனர். முக்கூட்டுக்கல் திருக்குடும்ப தேவாலயத்தில் நவம்பர் மாதம் 3 ம் தேதி முதல் 6 ம் தேதி வரை ஹோம் மிஷன் அருட்கன்னியர்கள் 12 பேர் 6 குழுக்களாக பிரிந்து தேவாலயத்தின் அனைத்து உறவியங்களிலும் உள்ள எல்லா குடும்பங்களையும் சந்தித்து அவர்களின் ஆன்மீக வளர்ச்சிகான தேவைகளை அறிந்து அதற்கான விழிப்புணர்வுகளை கொடுத்தனர்



ஒவ்வொரு நாளும் சந்தித்த குடும்பங்களை ஆலயத்தில் வரவழைத்து மாலை 6 மணி முதல் 8 மணி வரை தியானம் மற்றும் ஆராதனை நடத்தினார்கள். கடைசி நாளான (6-11-25) வியாழக்கிழமை தேவாலயத்தில் அனைத்து

உறவியங்களுக்கும் சேர்த்து மாலை 6 மணி முதல் தியானமும் ஆராதனையும் அதைத்தொடர்ந்து ஈசோவின் திரு இருதய படம் மற்றும் மெழுகுதிரி ஏந்தி ஆலயத்தை சுற்றி பவனியும் நடைபெற்றது.

### திருச்சிலுவை ஆலயம், மாலைக்கோடு

மாலைக்கோடு திருச்சிலுவை தேவாலயத்தை சுமார் மூன்றரை ஆண்டுகள் சிறப்பாக வழி நடத்திய அருட்தந்தை ஜோஸ் வயலில் அவர்கள் பணி மாறுதல் பெற்று 27 அக்டோபர் 2025 அன்று கிறிஸ்துராஜபுரம் கிறிஸ்து அரசர் ஆலயத்திற்கு சென்றார். புதிய பங்குத்தந்தையாக அருள்தந்தை றோபின்ஸ் குழிகோடில் அவர்கள் அக்டோபர் 27 இல் பொறுப்பு ஏற்றுக் கொண்டார்.பங்கு மக்கள் பூச்செண்டு கொடுத்து வரவேற்றனர். பொறுப்பேற்றவுடன் பங்கின் முதல் பணியாக நோய்வாய்ப்பட்டு இல்லத்தில் அவதியுறும் நோயாளிகளை சந்தித்து அவர்களுக்காக ஜெபித்தார். நான்கு மாத திருத்தொண்டு பணிக்காக திருத்தொண்டர். பிபின் கோயிக்க குடியில் அவர்கள் நமது பங்கில் வருகை புரிந்துள்ளார். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலை 6 மணிக்கு திருப்பலியும் அதைத்தொடர்ந்து ஒரு மணி நேர நற்கருணை ஆராதனையும் தொடங்கப்பட்டது. அனைத்து செவ்வாய்க்கிழமைகளில் மாலை 6 மணிக்கு மரியன் சேனை தலைமையில் ஆலயக்குருசடியிலும் அனைத்து புதன்கிழமைகளில் மாலை 6:00 மணிக்கு மானாட்டுவிளையில் புதிதாக உருவாக்கப்பட்ட குருசடியிலும் ஜெபமாலை நடைபெறுகிறது. எல்லா மாதமும் கடைசி சனிக்கிழமைகளில் பயிற்சி தியானங்கள் நடத்த பங்கு பேரவையால் தீர்மானிக்கப்பட்டது. அதன் தொடக்கமாக நவம்பர் 29 அன்று மாலை திருப்பலியும் தொடர்ந்து திருப்பலியை குறித்தான ஒரு மணி நேர ஒலி ஒளி காட்சி (Audio Visual) முறையில் தியானமும் நடத்தப்பட்டது. இளைஞர் இயக்கத்தின் சார்பில் கிறிஸ்மஸ் குலுக்கல் பரிசு சீட்டு வெளியிடப்பட்டது. பங்கின் 60-ம் வருட ஜூபிலி ஆயத்தமாக அனைத்து நிகழ்வுகளும் ஒருங்கிணைக்கப்பட்டு வருகிறது.





### புனித தோமையார் ஆலயம், முழுக்கோடு

23/11/2025 அன்று புனித தோமையார் ஆலயம் முழுக்கோட்டில்



இயங்கி வரும் தந்தைமார் இயக்கத்தில் இருந்து எம்மாவுஸ் பெண்கள் மறுவாழ்வு மையம் மனநிலை பாதிக்கப்பட்டவர் இல்லத்திற்கு சென்று அவர்களுக்கு மதிய உணவு மற்றும் நல திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

## படந்தாலுமூடு

### திரு இருதய மறைவட்ட ஆலயம், படந்தாலுமூடு

9/ 11/ 2025 அன்று மிஷன் லீக் சார்பாக நடைபெற்ற பேரணியில் (ராலி) ஏராளமான மாணவர்கள் கலந்து கொண்டார்கள். 23/ 11/ 2025 கிறிஸ்து அரசர்





திருவிழாவை முன்னிட்டு குழந்தை ஈசோ இயக்க குழந்தைகள் பல்வேறு புனிதர்களின் வேடம் அணிந்து திருப்பலியில் கலந்து கொண்டார்கள். 30/12.2025 அன்று நடைபெற்ற பங்கு பேரவைக் கூட்டத்தில் பஜனை பற்றிய ஆலோசிக்கப்பட்டு 8/12/2025 முதல் 18/12/2025 வரை பஜனை பாடலாம் என தீர்மானிக்கப்பட்டது. 7/11/2025 அன்று திரு இருதய மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியின் 47வது ஆண்டு விழாவும், திரு இருதய மழலையர் பள்ளியின் 50 வது ஆண்டு விழாவும் கொண்டாடப்பட்டது.

### புனித மார்ட்டின் டி போரஸ் ஆலயம், கழுவன்திட்டை

புனித மார்டின் டி போரஸ் ஆலயத்தின் திருவிழா 2/11/2025 முதல் 9/11/2025 வரை நடைபெற்றது. 2/11/2025 அன்று மாலை 6. 15 மணிக்கு படந்தாலுமூடு மறைவட்ட ஆலய பங்கு தந்தை பேரருட்தந்தை தோமஸ் சத்திய நேசன் அவர்கள் திருக்கொடியேற்றினார்கள்.திருவிழாவில் ஒவ்வொரு நாளும் மாலை 5:30 மணிக்கு ஜெபமாலை, பாதுகாவலரின் நவநாள் அதைத்

தொடர்ந்து 6.15 மணிக்கு ஆடம்பரத் திருப்பலி நடைபெற்றது. 5/11/2025 அன்று திருப்பலிக்குப் பின் ஊர்திகள் மந்திரிக்கப்பட்டது. 6/11/2025 அன்று உறவியங்கள் மற்றும் பக்த இயக்கங்களின் ஆண்டு விழா அருட்தந்தை மிஜோ புத்தன்புரைக்கல் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 7/11/2025 அன்று திருப்பலிக்கு பின் மறைக்கல்வி ஆண்டு விழா அருட்தந்தை டோஜி கொழுவகண்டத்தில் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. 8/11/2025 மாலை 5:30 மணிக்கு ஆடம்பர திருப்பலி மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதன் பின் மாலை 7:30 மணிக்கு தேர் பவனி நடைபெற்றது. இறுதி நாளான 9/11/2025 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 9 மணிக்கு ஜெபமாலை, அதைத் தொடர்ந்து இராசை திருப்பலி நடைபெற்றது. அதன்பின் ஆலயத்தில் பவனி மற்றும் திருக்கொடி இறக்குதல் நிகழ்வும் நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் அன்றைய நிகழ்வுகளுக்குப் பின் நேர்ச்சை விருந்தும் நடைபெற்றது. 23/11/25 அன்று கிறிஸ்து அரசர் திருவிழாவை முன்னிட்டு குழந்தை ஈசோ இயக்க மாணவர்கள் புனிதர்களின் வேடமணிந்து திருப்பலியில் கலந்து கொண்டார்கள்.



## களியல்

- **புனித தோமையார் ஆலயம், மாறப்பாடி**

2025 நவம்பர் 1 சனிக்கிழமை ஆலயத்தில் கிறிஸ்து யூபிலி சிறப்பு பரிகார நற்கருணை ஆராதனை 12 மணி நேரம் நடைபெற்றது காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை நற்கருணை ஆராதனையும்,6.30 மணிக்கு நற்கருணை ஆசிரும், அதனை தொடர்ந்து திருப்பலியும் நடைபெற்றது. நற்கருணை ஆராதனை உறவியங்கள் மற்றும் பக்த இயக்கங்கள் தலைமையில் வழிநடத்தப்பட்டது நவம்பர் 9 ஞாயிற்றுக்கிழமை அன்று மறைமாவட்ட தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது. திருப்பலிக்கு முன்னதாக அடையாள காணிக்கை உறவிய பொறுப்பாளர்களால் நடத்தப்பட்டது. 8.30 மணிக்கு திருப்பலியும் அதனை தொடர்ந்து பொதுக்கூட்டமும் நடைபெற்றது. இறுதியாக



அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. நவம்பர் 20 முதல் 23ஆம் தேதி வரை திரு இருதய அருட் சகோதரிகளால் பங்கில் ஹோம் மிஷன் நடத்தப்பட்டது. 10 அருள் சகோதரிகள் வருகை புரிந்தனர் ஐந்து குழுக்களாக சென்று 3 நாட்கள் அனைத்து வீடுகளையும் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடினார்கள் .இறுதியாக 23 அன்று மாலை 3 மணி முதல் 5 மணி வரை சிறப்பு பாவசங்கீர்த்தனமும், 4.30 மணிக்கு திருப்பலியும் அதனைத் தொடர்ந்து தியான உரை மற்றும் சிறப்பு நற்கருணை ஆராதனையும் நடைபெற்றது. பின்னர் திரு இருதய சொரூப பவனியும் நடைபெற்றது. இறுதியாக அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது. நவம்பர் 23 அன்று கிறிஸ்து அரசர் திருவிழாவை முன்னிட்டு குழந்தை ஈசோ இயக்க மாணவர்கள் அனைவரும் புனிதர்கள். வேடமணிந்து திருப்பலியில் கலந்து கொண்டனர்.

### திரு இருதய ஆலயம், பள்ளிக்கோணம்

கிறிஸ்து ஜூபிலி 2025 சிறப்பிக்கும் வண்ணம் திரு விவிலிய ஜோதி அன்னை மரியா உறவியம் மற்றும் அன்னை தெரேசா உறவியங்களில் பயணித்துக் கொண்டிருக்கிறது. 9/11/2025 மறை மாவட்ட தினம் சிறப்பிக்கப் பட்டது. இல்லங்களில் திரு விவிலியம் காட்சிப் படுத்துதல் போட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. டிசம்பர் 14 அன்று மதிப்பெண் போடப்பட்டு, சிறப்பாக காட்சி படுத்தும் குடும்பங்களை தேர்வு செய்து பரிசுகள் வழங்கப்படும். 16/11/2025 மறை மாவட்ட சிறு மலர் மிஷன் லீக் பேரணியில் பங்கு



குழந்தை ஈசோ இயக்க சிறுவர்கள் பல்வேறு வேடமணிந்து கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். மறைக்கல்வி ஆசிரியர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். களியல் மறை வட்டத்திற்கு இரண்டாம் இடம் கிடைக்கப் பெற்றுள்ளது. நவம்பர் 23 கிறிஸ்து அரசர் பெருவிழா, அன்றையதினம் குழந்தை ஈசோ இயக்க சிறுவர்கள் பல்வேறு புனிதர்கள் வேடமணிந்து, திருப்பலி சிறப்பித்தார்கள். 30/11/25 தந்தையர் இயக்கம் மற்றும் மாதர் ஜோதிஸ் இயக்கத்தை பார்வையிட்டு ஆலோசனைகள் வழங்கவும், ஊக்கப் படுத்தவும், மறைமாவட்ட இல்வாழ்வு இயக்க இயக்குநர் தந்தை ஜிம்மி அவர்கள் வருகை தந்து திருப்பலியும் நிறைவேற்றினார். தந்தையர் இயக்கம் மற்றும் அனைத்து தாய்மார்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### புனித சூசையப்பர் ஆலயம், காரோடு

காரோடு புனித சூசையப்பர் ஆலயத்தில் 2025 நவம்பர் 9 அன்று அருள் சகோதரி மரியா டெசா LSDP அவர்களின் முதல் வார்த்தைப்பாடு, நன்றி திருப்பலி நடைபெற்றது. காலை 9.30 மணிக்கு குருகுல முதல்வர் பேரருட்பணி ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் தலைமை தாங்கி திருப்பலி நிறைவேற்றினார்கள்.



முன்னாள் பங்கு தந்தையர்கள், நிகழ்வில் கலந்து கொண்டனர். அதைத் தொடர்ந்து பங்கு மக்கள் சார்பாக பாராட்டு விழாவும் நடைபெற்றது.

# தென்காசி மறைத்தள செய்திகள்

## மறை மாவட்ட தினம்

மறை மாவட்ட தினத்தை சிறப்பிக்கும் வகையில் அனைத்து பங்குகளிலும் மறை மாவட்ட தினம் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. புளியரை மற்றும் புதூர் ஆகிய இடங்களில் ஒன்றிணைந்து புளியரை ஆலயத்தில் வைத்து நவம்பர் மாதம் ஒன்பதாம் தேதி ஞாயிற்றுக்கிழமை 10 மணி அளவில் ஆடம்பர திருப்பலி நிறைவேற்றப்பட்டு, அனைவருக்கும் அன்பின் விருந்து வழங்கப்பட்டது. வாஞ்சி ஆலயத்தில் சிறப்பு கலை நிகழ்ச்சிகளுடன் மறை மாவட்ட தினம் அனுசரிக்கப்பட்டது.



## மிஷின் லீக்

மறை மாவட்ட அளவில் நடத்தப்பட்ட மிஷன் லீக் பேரணி தென்காசி மறைத்தளத்தை சேர்ந்த 23 மிஷன் லீக் உறுப்பினர்கள் மற்றும் மறைத்தள மிஷன்லீக் இயக்குநர் அருட்தந்தை ஜோய்ஸ் எம்.சி.பி.எஸ் மற்றும் ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை சுமேஷ் ஆகியோரும், 5 அருட்சகோதரிகளும் பங்கெடுத்து இறையாசீர் பெற்றனர்.



## மறைக்கல்வி போட்டிகள்

நவம்பர் மாதம் 30 ஆம் தேதி தென்காசி மறைத்தள அளவிலான மறைக்கல்வி போட்டிகள் நடைபெற்றன. மதியம் 1:30 மணி அளவில் போட்டிகள் ஆரம்பமானது. மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர் அருட்தந்தை அபிலாஷ் சேவியர் மற்றும் தென்காசி மறைத்தள ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை சுமேஷ் மற்றும் இயக்குநர் அருட்தந்தை அமன்றோ ஆகியோர்

தலைமையில் தொடக்க விழா நடத்தப்பட்டு போட்டிகள் ஆரம்பமானது. இதில் ஆம்பூர் மறைத்தளம் *189* புள்ளிகள் பெற்று முதல் இடத்தையும், புளியரை





ஆலயம் *160* புள்ளிகள் பெற்று இரண்டாம் இடத்தையும், வாஞ்சி நகர் ஆலயம் *157* புள்ளிகள் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றது. அனைத்து பங்குகளிலிருந்தும் மாணவ மாணவிகள் மிக உற்சாகத்துடன் போட்டிகளில் பங்கெடுத்தனர்.

**தகவல் சேகரிப்பு : திருமதி சினேக லதா | திருமதி ஹேமா | திருமதி செலின் மேரி | திருமதி ஷீலா | திருமதி ஷைலா | திருமதி சுனிதா**

## பணி மாறுதலும் நியமனமும்

பேரருட்தந்தை ஜோஷி குளத்தும்கல் அவர்கள், நவம்பர் 24, 2025 முதல் நடைமுறைக்கு வரும் வகையில், ரோமில் உள்ள போன்டிஃபிக்கல் ஓரியண்டல் நிறுவனத்தின் திருச்சபைச் சட்டத் துறைடன் இணைக்கப்பட்ட வடவத்தூரில் உள்ள கீழைத் திருச்சபைச் சட்ட நிறுவனத்தின் நிரந்தர ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரது புதிய பணியில் இறைவனின் ஆசீர்வாதங்கள் கிடைக்க வேண்டுகிறோம்.

## BIRTHDAY OF REV. FATHERS – DECEMBER 2025

| NO | NAME | DATE |
|---|---|---|
| 1 | FR. JOSE KANACHIKUZHIYIL | 03 |
| 2 | FR. ALEX PUTHETTU | 16 |
| 3 | FR. ANTONY JOSE | 18 |
| 4 | FR. JOSEPH ANITHOTTAM CMI | 18 |
| 5 | FR. MATHEUS ROBERT | 26 |

## FEASTDAY OF REV. FATHERS – DECEMBER 2025

| NO | NAME | DATE |
|---|---|---|
| 1 | FR. ABILASH XAVIER RAJ | 03 |
| 2 | FR. JOHN JOSEPH | 27 |
| 3 | FR. JOSHY KULATHUMKAL | 27 |
| 4 | FR. SUBIN SCARIA PUTHENPURACKAL | 27 |
| 5 | FR. GEO OOROTH | 27 |

## BISHOP'S ENGAGEMENTS - DECEMBER 2025

| DATE | DAY | TIME | EVENTS |
|---|---|---|---|
| 1 | Mon | 10.00 am | Changancherry : Requiem Holy Qurbana |
| 2 | Tue | 05.00 pm | Cristurajapuram : School Annual Day |
| 3 | Wed | 09.30 am | Sangamam : Pastoral Council |
| 4 | Thu | 09.30 am | Bishop's House: Curia meeting |

| | | | |
|---|---|---|---|
| 5-7 | Fri - Sun | 03.00 pm | Kalluvilai : Diocesan Bible Convention Diocese level Jubilee conclusion |
| 8 | Mon | 05.00 pm | Kuzhithurai : Blessing of Diocesan Legal Cell Office |
| 10-12 | Wed to Fri | | Chennai : Health Commission Meeting |
| 13 | Sat | 07.30 am<br>10.30 am<br>02.00 pm<br>06.00 pm | Neyyoor : UCC Christmas gathering Kalluvilai : CAT/ KII/CML Christmas Gathering Kalluvilai : Matruvedi Smart Christmas Celebration<br>Tenkasi : Mission Christmas Gathering |
| 14 | Sun | 09.30 am | Plankalai : SMYM Christmas Gathering |
| 15 | Mon | | Bishop's House: Curia meeting |
| 16 | Tue | 11.00 am<br>07.00 pm | Kuzhithurai : Kuzhithurai Bishop's House Blessings Kozhiporvilai : Christmas Gathering |
| 17 | Wed | 10.00 am<br>05.00 pm | Sangamam : Christmas gathering with Corporate school heads & Special School Heads Sangamam : Presbyterium Christmas Celebration |
| 18 | Thu | 11.00 am<br>02.00 pm | Arumanai : Christmas Gathering and distribution of gifts Manalikarai: School Christmas Celebration |
| 20 | Sat | 09.00 am<br>02.00 pm<br>05.00 pm | CRI Christmas Celebration Kalluviali : KKSSS Inter Religious Christmas celebration Padanthalummoodu : Mariyavin Senai Christmas Celebration >> Madurai |

| | | | |
|---|---|---|---|
| 21 | Sun | 09.30 am<br>01.00 pm | Madurai: Holy Qurbana and Christmas gathering Madhurai : Extended Territory Christmas Celebration |
| 22 | Mon | 09.30 am<br>11.00 am | Periavilai : Marriage Holy Qurbana<br>Karungal : UCC Christmas Gathering |
| 23 | Tue | 10.00 am<br>7.30 pm | Mukkoottukal: Minor & Major Seminary Christmas Gathering<br>Bishop' s House: Neighborhood Christmas Gathering |
| 24 | Wed | 07.00 pm | Athencode : Christmas Holy Qurbana |
| 25 | Thu | | Christmas |
| 26 | Fri | 10.30 am | Pacha : Baptism Holy Qurbana |
| 27 | Sat | | Bishop's House |
| 28 | Sun | 04.00 pm | Thettiyod : First Holy Communion and Parish level Jubillee conclusion |
| 29 | Mon | | Bishop's House |
| 30 | Tue | 11.00 am | Kochi: Golden Jubilee Holy Qurbana |
| 31 | Wed | 07.00 pm | Chembagatharisu: New Year Holy Qurbana |

**FR. LIJU MATHEW, BISHOP'S SECRETARY**




Priest Conference




First Profession Perumchilumbu




Sacred Heart School Annual Day at Padanthalumoodu

16-11-2025



MISSION LEAGUE RALLY AT SOOSAIPURAM




For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay Published by: Media Department of the Diocese of Thuckalay, Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175 Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570